Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 8.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 23 திங்கட்கிழமை (08.08.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 232

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

சீமெந்து

# ஜே.வி.பியின் அலுவலகம் மீது திருகோணமலையில் தாக்குதல்

## எம்.பியின் மெய்ப்பாதுகாவலர் படுகாயம்

(திருகோணமலை)

திருகோணமலை கந்தளாய்ப்பகுதியில் அமைந்துள்ள ஜே.வி.பியின் அலுவலகம் மீது நேற்றுகைக்குண்டுத்தாக்குதல் மற்றும் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நேற்று பிற்பகல் 1.30மணியளவில் இடம் பெற்ற இத்தாக்குதலில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். அவர் ஜே.வி.பியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜய சேகரவின் மெய்ப்பாதுகாவலராவார்.

தாக்குதல் இடம் பெற்ற சமயம் அலுவலகத்தில் ஜே.வி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்தவிஜயசேகர மக்கள் சந்திப்புக்களை நடத்திக்கொண்டிருந்ததாக ஜே.வி.பி. விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த பொலிஸ் சார்ஜன்ட் கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் குருநாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை மோட்டார் சைக்கிளில் வந்த இருவரினாலேயே ஜே.வி.பியின் அலுவலகம் மீது துப்பாக்கிப்பிரயோகம் மற்றும் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலை நடத்திவிட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச்சென்றவர்கள் மீது அலுவலகத்தில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் நடத்தியுள்ளனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## செங்கலடியில் குண்டு வெடிப்பு

### காயமடைந்த இருவர் வைத்தியசாலையில் அனுமதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செங்கலடி சந்தைக் கட்டடத் தொகுதியில் உள்ள பழக்கடை ஒன்றில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் இருவர் காயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 9.35 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இருதயபுரத்தைச் சேர்ந்த விஷ்வநாதன் ரவீந்திரன் (வயது 40) மற்றும் விநாயகபுரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் சிறீமோகன் (வயது 46) ஆகியோரே இதில் காயமடைந்தவர்களாவர்..

காயமடைந்த இருவரும் வாழைப்பழக் கடையை மூடுவதற்கு தயாராகிக்கொண்டிருந்த சமயம் இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டு (10 ஆம் பக்கம் பார்க்க)

# நெருக்கடி நிலைமைகளைத் தவிர்க்க பேச்சுக்களை ஆரம்பிப்பது அவசியம்

## கண்காணிப்புக்குழுத் தலைவர் வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் தற்போது எழுந்துள்ள நெருக்கடி நிலைமைகளை தவிர்ப்பதற்கு அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் உடனடியாக பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையிலான உறவுகளில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதுடன் பதற்றமான சூழ்நிலையும் உருவாகியுள்ளது. (10ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் ஐ.தே.கட்சி நேற்று ஆரம்பித்தது

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளை ஐக்கியதேசியக்கட்சி நேற்று ஆரம்பித்துள்ளது. நாடு பூராகவும் இப்பிரசார நடவடிக்கையை ஐக்கியதேசியக்கட்சி மேற்கொள்ளவுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு நடத்தப்படவுள்ள இப்பிரசார நடவடிக்கையின் மூலம் மக்களுக்கு பல கருத்துக்கள் எடுத்துக்கூறப்படவுள்ளதாக ஐ.தே.க.தெரிவித்துள்ளது. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் பிரதிநிதிகள், ஆதரவாளர்கள் பலரும் வீடுவீடாகச்சென்று பிரசாரத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதாரம், வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு ,சுனாமியினால் பாதிப்படைந்தவர்களுக்கான நிவாரணம் மற்றும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞனின் கொலையைக் கண்டித்து

# வவுனியா-திருமலையில் இன்று பூரண துக்கதினம்

(வவுனியா)

இணுவிலில் இளைஞன் ஒருவர் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை கண்டித்து வவுனியாவிலும் திருகோணமலையிலும் இன்று முழு அளவிலான துக்கதினம் அனுஷ்டிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இணுவில் பகுதியில் இடம் பெற்ற கொலைச் சம்பவத்தைக் கண்டிக்கும் முகமாக இந்த துக்க தினத்திற்கு அழைப்பு விடுத்து வவுனியா சிகை அலங்கரிப்பாளர் சங்கம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின்படி எமது மண்ணை விட்டு அகலாத அரச படைகள் எமது மக்களுக்கு தொடர்ந்தும் இன்னல்களை ஏற்படுத்தி வருவதாக சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இக்கொலையைக் கண்டித்து திருகோணமலையிலும் துக்கதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக திருகோணமலை மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்துக்க தினத்தை கடைப்பிடிப்பதற்கு திருகோணமலை மாவட்ட மக்கள் பேரவை தமது ஆதரவினை தெரிவித்து அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. (ச-8)

## இலங்கை இனப்பிரச்சினைத் தீர்விற்கு அரசியல் கட்சிகள் இணைய வேண்டும்

### விடார்ஹெல்கீசன் கோரிக்கை

யுத்தநிறுத்த காலப்பகுதியில் ஏற்படும் அசம்பாவிதச் சம்பவங்கள் இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாக நோர்வே பிரதிவெளி விவகார அமைச்சர் விடார்ஹெல்கீசன் தெரிவித்துள்ளார்.

இந்நடைமுறையில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ளவேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.நோர்வே உதவியுடன் மாத்தறையில் மேற்கொள்ளப்படும் கொடவுட மகா வித்தியாலய கட்டடத்தை ஹெல்கீசன் நேற்று பார்வையிட்டார். அதன்பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். நாட்டின் இனப்பிரச்சினையை தீர்த்துவைப்பதற்கு சகல அரசியல்கட்சிகளும் ஒன்றுபட்டுசெயற்படவேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார். அதே சமயம் நாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 30பாடசாலைகளை மீளக்கட்டிக்கொடுப்பதற்கு நோர்வே அரசாங்கம் முன்வந்துள்ளது. (சி)

EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021 - 222 3891, 222 6297, 0777-2349

011-2372952-3, 011-2360290, 011 - 2360291

e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.



எக்ஸ்போ ஏயா

வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை..

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழில் உள்ள சகல அரச திணைக்களங்களிலும் தமிழ் மொழிக்கு உரியஇடம் வழங்கப்படவேண்டும்

## அரச அதிபர் கே.கணேஷ் வலியுறுத்து

(கொழும்பு)

யாழ.மாவட்டத்திலுள்ள சகல அரச திணைக்களங்களிலும் தமிழ் மொழிக்கு உரிய இடம் வழங்கப்படுவது அவசியம் என்று யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் சகல திணைக்கள தலைவர்களுக்கும் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்.குடாநாட்டிலுள்ள அரச திணைக்களக் கருமங்களில் சிங்கள மொழியின் ஆதிக்கம் அதிகரித்து வருகின்றது. அரசினால் அனுப்பப்படும் படிவங்கள் சுற்றுநிருபங்கள்கூட தனிச்சிங்களத்தில் அனுப்பப்படுகின்றன இதனால் மக்களும் திணைக்கள உத்தியோகத்தர்களும் விண்ணப்பப்படிவங்கள், சுற்று நிருபங்கள் என்பவற்றில் உள்ளவற்றை வாசித்து விளங்கிக் கொள்ள முடியாது அவஸ்தைப் படுகின்றனர்.

தமிழ் மக்களும் தமிழ்இன அதிகாரிகளையுமே முற்றுமுழுதாகக்கொண்ட யாழ்.மாவட்ட அரச திணைக்களங்களுக்கு சிங்களத்தில் படிவங்களையும் சுற்று நிருபங்களையும் அனுப்பி அவற்றை வாசித்தறிய நிர்ப்பந்திப்பது அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் தனது தாய்மொழியை விட்டு பிறமொழியைத் திணிப்பது என்பது மொழி உரிமை மீறலின் உசசம் என்பதால் யாழ்.மாவட்டதிலுள்ள சகல திணைக்களத் தலைவர்களும் தமது திணைக்களத்தில் தமிழ் மொழியின் தனித்துவத்தையும் கௌரவத்தையும் பேணிச் செயற்படுவது அவசியமென அரச அதிபா கணேஷ மேலும வலியுறுத்தியுள்ளார். (ந-49)

# தப்பிச் சென்ற இராணுவத்தினருக்கு சட்ட அங்கீகாரம் காலக்கெடு நீடிப்பு

(கொழும்பு)

இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற இராணுவ வீரர்களுக்கு சட்டரீதியாக விலகிச் செல்வதற்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தை பயன்படுத்தாதவர்களை கைது செய்து அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதியில் இருந்து இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற இராணுவ வீரர்களுக்கு இச் சந்தர்ப்பம வழங்கப்பட்டிருபபதாக பாதுகாப்பு நடவடிக்கை தலைமைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுளளது.

இராணுவத்தில் இருந்து தப்பிச்சென்ற இராணுவ வீரா்கள் சட்டரீதியாக சேவையில இருந்து விலகுவதற்கான காலம் நேற்று முன் தினத்துடன் முடிவடைந்த போதிலும் அதனை இம்மாதம் 12ஆம் திகதி வரை நீடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-9)

# விண்ணப்பம் கோரல்

(சாவகச்சேரி)

வடகிழக்கு மாகாணத்தில் வெற்றிடமாகவுள்ள தொழிற் நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பயிற்சித்தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக குறிப்பிடப்படும் தகைமையுடைய மாகாண பொது சேவையில உள்ள பயிற்சிபெற்ற தொழிநுட்பதரங்களில் உள்ள திணைகள ஊழியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த.சாதரண தரத்தில் மொழி கணிதம் விஞ்ஞானம் திறமைச் சித்தியுடன் 6 பாடங்கள் சித்தியும் துறைரீதியாக 10 வருட அனுபவமும், பயிற்சி பெற்ற தொழில்நுட்ப தராதரங்களும், 5 வருட திருப்திகரமான சேவைப் பூர்த்தியுடையவரும் திணைக்களத் தலைவர் ஊடாக இதற்காக விண்ணப்பிக்கலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபால் மூலம் செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு இல.35 மக்கெய்சர் வீதி, உவர்மலை திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (ந-21)

# நியமனம்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய அழகியல் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளராக பருத்தித்துறை வட-இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை செல்வி. இன்பமலர் பரமலிங்கம் வடக்கு-கிழக்கு மாகாணக கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தும்பளை சைவப் பிரகாச மகாவித்தியாலயம் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் வட-இந்துமகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

இவர் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை பழைய மாணவி என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-52)

# மஹோற்சவம்

(சாவகச்சேரி)

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 10ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் விழா இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேட்டைத் திருவழாவும் மறுநாள் சப்பறத் திருவழாவும் 18ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் மறுநாள் பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும்.

பத்துத் தினங்களும் சைவப் புலவர் சி.கா.கமலநாதனின் சொற்பொழிவு இடம்பெறவுள்ளதுடன் அன்னதானமும் வழங்கப்படவுள்ளது. (ந-21)

# இராசிபலன்

**08.08.2005**
**(ஆடி 23, திங்கட்கிழமை)**
**திருதியை முற்பகல் 2.23வரை**
**பூரம் பிற்பகல் 12.31வரை**
**இராகுகாலம் 7.34 - 9.04 மணிவரை**
**சுபநேரம் 12.04 -1.34 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | வியாபார நன்மை, காரிய இடையூறு, கௌரவக்குறைபு, பணவிரயம். |
| இடபம் | கல்வியில் ஆர்வம், தாய்வழி உறவு, பயந்த சுபாவம், அனனியர் உறவு. |
| மிதுனம் | கூட்டுமுயற்சி, இனிய அனுபவம், பண வருவாய், அன்னியர் சந்திப்பு. |
| கடகம் | மதிப்புக்குறைவு, விதண்டாவாதம், முயற்சி தாமதம், தனவிரயம். |
| சிங்கம் | நல்லமுயற்சி, ஆழந்த சிந்தை, பெரியோர் சந்திப்பு, சயனசுகக் குறைவு. |
| கன்னி | காரிய அலைச்சல், பிதாசிந்தை, சயன சுகக்குறைவு, சுபசெலவு. |
| துலாம் | தொழில்சிந்தை, உறவினர் வருகை, பொருள் சேர்க்கை, முயற்சி கைகூடும். |
| விருச்சிகம் | அதிகாரம், சுபநிகழ்வு, உற்சாகம், எடுத்த காரியம் கைகூடும். |
| தனுசு | ஆன்றோர் சந்திப்பு, உடல் உழைப்பு, வீண்பயம், முயற்சி தாமதம். |
| மகரம் | எதிர்பாராத சம்பவம், காரிய தடங்கல், போசன சுகம், பணக்குறைவு. |
| கும்பம் | திடீர்பயணம், அபூர்வ சந்திப்பு, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை. |
| மீனம் | சுகவாழ்வு, சத்துரு ஜெயம், காரிய சித்தி, தொழில்விருத்தி. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
**- வளவன்**

# சமாதானத்தைக் கட்டியெழுப்ப திருமலையில் பயிற்சிப் பட்டறை

(திருகோணமலை)

மொழிகளுக்கிடையே ஒற்றுமையையும் இனங்களுக்கிடையே சமாதானத்தையும் கட்டியெழுப்பும் முகமாக பயிற்சிப் பட்டறை ஒன்று திருகோணமலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வாரத்தில் இரண்டு தடவைகள் என்ற அடிப்படையில் தொடர்ந்து 4 மாதங்களுக்கு இந்தப் பயிற்சிப் பட்டறை நடைபெறவிருப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

தேசிய இளைஞர் பேரவையில் இருந்து இளைஞர், யுவதிகளைத் தெரிவுசெய்து அவர்களுக்கு வட-கிழக்கு மாகாணத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்தப் பயிற்சிப்பட்டறை நடத்தப்படுகின்றது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் தமிழர்களுக்கு சிங்களமும், சிங்களவர்களுக்கு தமிழும் கற்பிக்கப்படும். கொழும்பு, கம்பகா, யாழ்ப்பாணம், திருமலை ஆகிய மாவட்டங்களில் மொழிகளுக்கிடையிலான ஒற்றுமைகள் இனங்களுக்கிடையில் சமாதானத்தையும் கட்டியெழுப்பும் மாதிரி திட்டமாக இந்தப் பயிற்சிப்பட்டறை நடைபெறுகின்றது.

இப்பயிற்சிப் பட்டறை திருகோணமலையில் உள்ள மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (அ-9)

# சுயவிருப்பில் ஓய்வுபெறும் திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தம்

(கொழும்பு)

போக்குவரத்து அமைச்சு கொத்தணி பஸ் கம்பனிகளுக்கு பணிப்பாளர்சபைகளை மீண்டும் நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

கொத்தணி பஸ்சேவையை திறம்பட இயங்க வைக்க மேற்கொள்ளப்படும் முதற்கட்ட நடவடிக்கை இதுவாகும்.

கம்பனி ஊழியர்கள் சுய விருப்பத்தின் பேரில் சேவையில் இருந்து ஓய்வுபெறும் நஷ்ட ஈட்டுத் திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சின் செயலாளர் கலாநிதி டி.எஸ்.ஜெயவீர தகவல் வழங்குகையில் நஷ்டஈட்டுத்திட்ட அடிப்படையில் ஓய்வு பெறுவதற்கு விண்ணப்பித்த ஊழியர்களில் 90சத வீதத்தினர் சாரதிகளும், நடத்தினர்களும் ஆவர் என்று கூறினார்.

இலங்கை போக்குவரத்துச் சபையை மீண்டும் ஏற்படுத்து வதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் இரண்டுவார காலத்தில் சமர்பிக்கப்படும் இதன் பின்னர் கொத்தணி பஸ்கம்பனி ஊழியர்களின் எண்ணிக்கை பற்றி தீர்மானிக்கப்படும். இதே சமயம் கடன் திட்டத்தின் அடிப்படையில் இந்தியாவிடம் இருந்து ஆயிரம் புதிய பஸ்கள் கொள்வனவு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-7)

# 60% அமைச்சர்கள் ஊழல் மிக்கவர்கள்!

(கொழும்பு)

கூட்டணி அரசாங்கத்தின் அமைச்சரவையில் இருக்கும் அமைசசர்களில் 60 சதவீதமானவர்கள் என்றும் அது தொடர்பில் அவதானத்துடன் இருக்குமாறும் பதவியிலிருந்து விலகிய பிரதியமைச்சர் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பிரதியமைச்சர் பதவியிலிருந்தும் நிவித்திகல தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்தும் வலகிய இரத்தினபுரி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எல்.பிரேமலால் ஜயசேகரவே ஜனாதிபதி சந்திரிகாவிற்கு இக கடிதத்தை அனுப்பியவராவார்.

இம்மாதம் இரண்டாம் திகதியிடப்பட்டு அனுப்பியுள்ள கடிதத்தில் கூட்டணி அரசு ஆட்சிக்கு வந்த 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இதுவரை மகாவலி அபிவிருத்தியமைச்சர் மைத்திரிபால சிறிசேனவும். அந்த அமைச்சின் அதிகாரிகளும் தன்னை எந்தவொரு வேலைத் திட்டத்தையும் செயற்படுத்த இடமளிக்கவில்லை என அவர் அந்த கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இரத்தினபுரி மாவட்டத்தின் சில அரசியல்வாதிகள் அடிக்கடி நிவித்திகல தேர்தல் தொகுதியின் செயற்பாடுகளில் தலையிட்டு முட்டுக்கடடைகளைப போடுவதால் நிவித்திகல தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்தும் தான் விலகுவதாக குறிப்பிட்டுள்ள அவர் ஏனைய அமைச்சுக்களினூடாகவும் இதுவரை மக்களுக்கு எதுவிதமான சேவையும வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

தனக்கு பணம் சம்பாதிப்பதலல நோக்கம், மக்களுக்கு சேவையாற்றுவதே நோக்கம் என்று குறிப்பிட்ட பிரேமலால் ஜயசேகர பெயரளவில் இருக்கும் பிரதியமைச்சா் பதவியிலிருந்து விலகுவதாக கூறியுள்ளார். (ந)

# மேர்வின் சில்வாவிற்கு எதிராக கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில் செயல்படும் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவிற்கு எதிராகவும், அவர் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் எதுவும் எடுக்க தவறிய அரசிற்கு எதிராகவும், இன்று திங்கட்கிழமை பிறபகல் 1 மணியளவில் கொழும்பு கோட்டை நிலையத்திற்கு முன்னால் அரசியல் கட்சிகளும் தொழிற சங்கங்களும் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபடவுள்ளன.

இந்த ஆர்ப்பாட்டப் போராட்டத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கவுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பெ.இராதாகிருஸணன் தெரிவித்துள்ளார். (ந)

# பாணுக்கு கட்டுப்பாட்டு விலை; பட்டியல் விரைவில் வெளியாகும்

(கொழும்பு)

பாணின கட்டுப்பாட்டு விலைப் பட்டியலை வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட விருபபதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்தவகையில் பல பாண் விற்பனை நிலையங்களில் திடீா சோதனைகள் ஏற்பட்டு அவற்றின் உரிமையாளர் கைது செய்யப்பட்டு சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவா தெரிவித்துள்ளார். (ந)

# சாள்ஸ் விஜயவர்த்தனவை மீட்க படையினர் முயற்சிக்காதது ஏன்?

## விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

இணுவிலில் அப்பாவி இளைஞன் படையினரால் கொல்லப்பட்டதையடுத்து கடத்திச்செல்லப்பட்ட யாழ்.பொலிஸ் பொறுப்பதிகாரி சாள்ஸ் விஜயவர்த்தன மூன்று மணி நேரமாக பணயக் கைதியாக வைக்கப்பட்டிருந்த பொழுது அவரை மீட்பதற்கு விசேட இராணுவப் படைப்பிரிவு எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாதது தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொமாண்டோ படைப்பிரிவின் தாக்குதல் பிரிவு, இராணுவ உந்துருளிப் படையணி மற்றும் கலகமடக்கும் பொலிஸ் எனபன நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தால் விஜயவர்த்தனாவை காப்பாற்றியிருக்கலாமெனவும் அவர் கடத்தப்பட்டது முதல் படுகொலை செய்யப்பட்டது வரை தொடர்ச்சியான தகவலை உளவுப்பிரிவு மூலம் தமது அதிகாரிகளுக்கு அறிவித்தும் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையெனவும் விசாரணை மேற்கொள்ளும் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சமபவம் நடைபெற்று மூன்று மணி நேரதிற்கு பின்னர் கொழுமபிலுள்ள படையதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டு இது தொடர்பாக விசாரணை செய்யும்வரை வட பகுதி பாதுகாப்பு அதிகாரிகள் இந்தச் சம்பவம் தொடர்பாக கவனத்தில் எடுக்கவில்லை என்ற தகவல வெளியாகியுள்ளதாகவும் அவா மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## ஜனாதிபதித் தேர்தல் குறித்து

# அரசியல் கட்சிகளுடன் ஆராய தேர்தல் ஆணையாளர் முடிவு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க அரசியல் கட்சிகளின் செயலாளர்களை சந்திக்கவுள்ள்தாக தேர்தல் திணைக்களத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இக்கலந்துரையாடலை அடுத்து வரும் இரண்டு வாரங்களுக்குள் நடத்துவதற்கு தேர்தல் ஆணையாளர் தயாராகவுள்ளதுடன் அது தொடர்பாக கட்சிகளின் செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இக்கலந்துரையாடலில் தேசிய ரீதியில் செயற்படுகின்ற கண்காணிபபுக் குழுக்களையும் விரைவாகப் பெறுபேறுகளைப் பெறும் வகையில் தனியார் கணனி நிறுவனங்களையும் கலந்து கொள்ளுமாறு தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இக் கலந்துரையாடலில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவது மற்றும் பிறவிடயங்கள் குறித்து தீர்க்கமான முறையில் ஆராயப்படவுள்ளதாகவும அந்த தகவல்கள் தெரிவித்துள்ளன. (ற)

# அமைச்சர்களின் வீடுகளுக்கு மேலதிக விஷேட பாதுகாப்பு

(கொழும்பு)

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் வீட்டைப் படம்பிடித்ததாகக் குற்றஞ்சாட்டி டிஜிற்ரல் ஒளிப்படக் கருவி மற்றும் கையடக்கத் தொலைபேசியுடன இரு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பிலுள்ள அனைத்து அமைச்சர்களின் வீடுகளிற்கும் மேலதிக பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதன்படி அமைச்சர்களின் வீடுகள் அமைந்துள்ள பகுதிகளில் வீதித்தடுப்பு அமைக்கபபட்டு சோதனை நடவடிக்கைகள் மேற்கௌள்ளப்படும் எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை, அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் வீட்டுக் கருகில் சந்தேகத்திற்கிடமான முறையில் படம் பிடித்ததாகக் குற்றஞ்சாட்டி கைதுசெய்யப்பட்ட இளைஞர்களிற்கு எதிரான விசாரணைகள் கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# மரண தண்டனை நிறைவேற்றப்படாமை; மேல் நீதிமன்ற நீதிபதிகள் விசனம்

(கொழும்பு)

மரணதண்டனை நிறைவேற்றப்படாமை குறித்து மேல நீதிமன்ற நீதிபதிகள் சிலர் விசனம் தெரிவித்துள்ளனர்.

மரணதண்டனை நிறைவேற்றப்படாமையினால் நீதிமன்ற பிரிவில் ஏற்படும் நிலைமை என்னவென்பது பற்றி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு விடயங்களைத் தெளிவுபடுத்த அந்த மேல் நீதிமன்ற நீதிபதிகள் தீர்மானித்துள்ளனர்.

முழு சமுதாயத்திலும் பரபரப்பை ஏற்படுத்தும் கொடிய படுகொலைகள் நிகழகையில் மரண தண்டனைகள் நிறைவேற்றப்படும் என கூறப்பட்ட போதிலும் சில காலம் சென்ற பின்னர் அந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படுவது பிரச்சினைக்குரியது என கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரோகிணி பெரேரா தெரிவித்துள்ளார். (ற)

# அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை திருப்திப்படுத்தவே சபை முதல்வர் பதவி

## ஆளும்கட்சி வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

வேலைப்பளு காரணமாக சபை முதல்வர் பதவியிலிருந்து விலகியதாக அமைசசர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ள போதிலும் அது உண்மையான காரணம் அல்லவென ஆளும் கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை பிரதமராக நியமிக்க முடியாமல் போனமையினாலும் அதன்ால் அதிருப்தியடைந்துள்ள அவரைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காகவும மைத்திரிபால சிறிசேனவை அந்தப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு அந்தபபதவியை நிமால் சிறிபால டி சில்வாவிற்கு வழங்குவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

உறுதியளித்தபடி தன்னை பிரதமர் வேட்பாளராக நியமிக்காதது ஏன்?, என நிமால் சிறிபால டி சில்வா ஜனாதிபதியிடம் வினவியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் அவரைத் திருப்திப்படுத்துவதற்காகவே அவருக்கு சபை முதல்வர் பதவியை வழங்க தீர்மானிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (ற)

# பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் இணக்கசபை அமைக்க நீதியமைச்சு ஆராய்வு

(கொழும்பு)

நாட்டின் பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் இனக்க சபைகளை நிறுவுவது பற்றி நீதியமைச்சு ஆராய்ந்து வருகின்றது.

இந்தச் சபைகள் பல துறைகளில் பிரச்சினைகளைத் தீர்த்துவைப் பதில் வெற்றிகண்டுள்ளதனால் இந்த முயற்சி மேற் கொளளப்படுவதாக நீதித்துறை அமைச்சு டபிள்யு,.டி.யே.செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

தற்சமயம் நாட்டில் 250இணக்க சபைகள் செயற்படுகின்றன. அவை வருடாந்தம் சுமார் 6லட்சம் சிறிய பிணக்குகளை தீர்த்து வைக்கின்றன.

இணக்கசபைகள் ஆற்றும் சேவைகள் பற்றி மதிப்பீடு செய்ய அம்பாறையில் நடைபெற்ற வைபவத்தின் போது இந்த விபரங்கள் தெரிவிக்கப் பட்டன. (அ-7)

# பிணைமனு விண்ணப்பம் நிராகரிப்பு

(கொழும்பு)

கொழும்பில் உள்ள வீடொன்றில் இருந்து பெருந்தொகையான போதைப்பொருட்களுடன் கைதுசெய்யப்பட்ட முகமத்சியாம் தாக்கல்செய்த பிணை மனு விண்ணபத்தை கொழும்பு மேல நீதி மன்றம நிராகரித்துள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரட்ணவே இப்பிணை மனு விண்ணப்பத்தை தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கியுள்ளார். இதனையடுத்து, சந்தேக நபர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. சந்தேக நபர் தற்பொழுது விளக்கமறியலில் வைக்கப்படடுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-7)

# யாழில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேரர்கள் உதவுபொருட்கள் அன்பளிப்பு







(யாழ்ப்பாணம்)

பிரான்ஸ் நாட்டில் வாழும் இலங்கையர்கள் சேர்த்த பொருட்களும், சமாசத்தினர் சேர்த்த பொருட்களும் வணக்கத்திற்குரிய பிட்டுதுவே சிறி தம்பதேரரின் அனுசரணையில் ஒழுங்குசெய்யப்பட்டு யாழ்.பிரதேசத்தில் சேவைசெய்யும் இராணுவ அங்கத்தவர்களுக்கும் கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்தத்தினால் இடம் பெயர்ந்த பொது மக்களுக்கும் கடந்த 21ஆம் திகதி பகிர்ந்தளிக்கப்பட்டதென பலாலி இராணுவப் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் வெளியிட்டுள்ள பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பலாலி இராணுவ ஆதார வைத்தியசாலைக்கு விலையுயர்ந்த ஊசி மருந்துகளும், முக்கியமான மருந்துப்பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன. கடந்த 2ஆம் திகதி வணக்கத்திற்குரிய பிட்டுதபே ஸ்ரீதம்ப தேரர், பரவாதேர சத்ரரத்ன நாயக்க கிமிபானன் தேரர்களினால் யாழ்.பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகத் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.ரி.தென்னக்கோன், பலாலி வைத்தியசாலையின் தலைவர் மேஜர் எம்.பி.வீர சேகர ஆகியோர் தேரர்களிடம் இருந்து இந்த நன்கொடைகளைப் பெற்றுக்கொண்டனர். இதன் பின் நோயாளர்கள் தங்கி சிகிச்சைபெறும் இராணுவ அங்கத்தவர்களைச் சந்தித்து உடல் நலம் விசாரித்ததுடன் விடுதிகளையும் பார்வையிட்டனர்.

511வது படையணியின் பிரதேசத்தில் உள்ள அச்சுவேலிப்பிரதேசத்தில் வசிக்கும் கஷ்ரப்பட்ட குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 10 குடும்பங்களுக்கு உடைகளும், உணவுப் பண்டங்களும், அன்றாடத் தேவைக்கான பொருட்கள் அடங்கிய 10பொதிகளும் வழங்கப்பட்டதுடன் அச்சுவேலி சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபர் கே.ஆர்.ராஜசேகரத்திடம் பாடசாலைப் பொருட்கள் அடங்கிய இரு பொதிகள் கையளிக்கப்பட்டன.

மேலும் 513வது படையணிக்கு உட்பட்ட பிரதேசத்தில் உள்ள தெல்லிப்பழை, பலாலி, மயிலிட்டி ஆகிய இடங்களில் இருந்து யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீனவர்கள் வாழும் அகதிமுகாமில் உள்ள மிகவும் கஷ்டப்பட்ட 20குடும்பங்களுக்கும் மானிப்பாய் அகதிமுகாமில் உள்ள 20 குடும்பங்களுக்கும் பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன.

அதனைத்தொடர்ந்து 512ஆவதும், 513ஆவது படையணிக்கு உடபட்ட பிரதேசத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில கல்வி கற்கும் மாணவர்களுக்கான பாடசாலை உபகரணப்பொருட்கள் அந்தந்த பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன.

இதேவேளை, மானிப்பாய் ஆங்கிலப் பாடசாலையின் அதிபர் திருமதி ஆர்.சண்முகரத்தினம், மானிப்பாய் பெண்கள் பாடசாலை அதிபர் திருமதி எஸ்.ஜெயவீரசிங்கம், மானிப்பாய் இந்து ஆண்கள் பாடசாலையின் அதிபர் எஸ்.சி.சிவநேஸ்வரன், கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் திரு.பி.கமலநாதன், பெரியபுலம் பாடசாலையின் அதிபர் கே.கனகசிங்கம், வைத்தீஸ்வரா பாடசாலையின் அதிபர் கே.வன்னியசிங்கம் ஆகியோர்கள் உதவி பொருட்களை வழங்கிய தேரர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டனர் என படைத்தலைமையகம் வெளியிட்டுள்ள அச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# யாழ்ப்பாண மாவட்டத்தின் புதிய பிரதேச செயலக உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் அமைப்பதன் அவசியம்

2 (தொடர்ச்சி...)

தென்மராட்சி 232 சதுர கிலோ மீற்றர் பரப்பளவையும் 75,000 மக்கள் தொகையையும் கொண்ட மிகப் பரந்த பிரதேசமாகவுள்ளது. தென்மராட்சியின் கிழக்குப் பிரதேசம் மத்தியிலும் மேற்கிலும் பார்க்க அபிவிருத்தி குறைந்ததாகவும் வளங்கள் முழுமையாக பயன்படுத்தப்படாமலும் இருக்கின்றன.

தென்மராட்சியில் 60 கிராம அதிகாரி பிரிவு இருப்பதனால் அவற்றை ஒரு நிர்வாகத்திற்குள் நிர்வகிப்பது கஷ்டம் என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. 1995ஆம ஆண்டு இடப்பெயர்வினாலும் 2000ஆம் ஆண்டு யுத்தத்தினாலும் இப்பிரதேசம் பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது. இடப்பெயர்வினால் சுற்றுச்சூழல் மாசுபடுதலையும் யுத்தத்தினால் பெரும் அழிவுகளையும் சந்தித்துள்ளது. தென்மராட்சி கிழக்குப் பகுதிக்கு புதிய அரசாங்க அதிபர் பிரிவு உருவாகினால் பல நன்மைகள் இப்பிரிவிற்கு வருமென எதிர்பார்க்கப்படுகின்றன. இப்பிரிவு உருவாககப்பட வேண்டுமென யாழ்ப்பாண மாவட்ட பாராளுமனற அங்கத்தவர்கள், நிர்வாகிகள், பொதுமக்கள் மத்தியில் கருத்தொற்றுமை இருந்தபொழுதும் இதுவரை செயலுருப்பெறவில்லை. இப்பிரிவு உருவாக்கம் கச்சாய், வரணி, மிருசுவில் பகுதிகளை உள்ளடக்கிய 26 கிராம அதிகாரிகள் பிரிவுகளைக் கொண்ட தென்மராட்சி கிழக்கு மக்களின் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும்.

### வலிகாமம் கிழக்கு அச்சுவேலி

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் வடபகுதி மக்கள் இப்பிரிவின் வடபகுதியை தனியானதொரு பிரிவாக அமைக்க வேண்டுமென விரும்புகின்றனர். இப்பிரிவிற்குள் அச்சுவேலி, பத்தைமேனி, இடைக்காடு, கதிரிப்பாய், வளலாய், ஆவரங்கால, புத்தூர்ப் பகுதிகள் அடங்கவேண்டுமென எதிர்பார்க்கின்றனர். இப் புதிய பிரிவு 40,000 மக்களையும் அபிவிருத்தி வாய்ப்புக்களையும் வளங்களையும் கொண்டுள்ளது. மேலும அச்சுவேலி வளர்ந்துவரும் நகராக இருப்பதால் இப்புதிய பிரிவின் நிர்வாக மையம் இந்நகரிலேயே அமைய வேண்டும் இதனால் மக்களின் நிர்வாகத் தேவைகள் அபிவிருத்தியை முன்னெடுக்க வழிவகுககும்.

### வடமராட்சி மேற்கு

வடமராட்சி தெற்கு - மேற்கு நல்ல பொருத்தப்பாடாக இருக்கவில்லை. வடமராடசி வடக்கும கிழக்கும் தனித்தனியாக பிரிக்கப்பட்டது போல் இதுவும் மேற்கும் தெற்கும் என தனித்தனியாகப் பிரிக்கப்பட வேண்டுமென வடமராட்சி மக்கள் விரும்புகின்றனர். வரலாற்று ரீதியில் உடுப்பிட்டி ஒரு முக்கிய பகுதியாக இருந்தது. வடமராடசி மேற்கிலும் மணியகாரர் இருந்துள்ளனர்.

முன்னர் இருந்த பாராளுமன்ற தேர்தலதொகுதி (1960-1977) உடுப்பிட்டித் தொகுதி என்றே அழைக்கப்பட்டது. இத்தகைய வரலாற்றுப் பின்புலத்தில் வடமராட்சி மேற்கு மக்கள் தங்களுக்கு தனியானதொரு பிரிவு உருவாக்கப்படவேண்டும் என்று நிற்கின்றனர்.

வடமராட்சியில் புலோலி, கட்டைவேலி, துன்னாலை போன்ற பகுதிகளுடன் ஒப்பிடுமிடத்து உடுப்பிட்டி, கரணவாய், வல்லைப் பகுதிகள் பொருளாதார ரீதியில் அபிவிருத்தி குறைந்த பகுதிகளாகவுள்ளன. உடுப்பிட்டியும் வளர்ச்சி பெறாத சிறிய சேவை மையமாகவே இருக்கின்றது. இப்பிரதேசததை அபிவிருத்தி செய்யவும் உடுப்பிட்டியை ஒரு நகராக வளர்த்தெடுக்கவும் இப்பிரதேசத்திற்கு தனியானதொரு பிரிவு அமைக்கப்படவேண்டுமென இப்பிரதேச சிவில் அமைபுகளும், மக்களும் விரும்பி நிற்பதையும் அழுததம் கொடுத்துக் கொண்டிருப்பதையும் காணமுடிகின்றது.

### அரியாலை

அரியாலைப் பிரதேசத்துக்கு தனியானதொரு பிரதேச/ உதவி அரசாங்க அதிபர் பிரிவு வேண்டி மக்கள் நீண்டகாலமாக குரல் கொடுத்துக்கொண்டு இருக்கின்றனர். அரியாலை தனித்துவமான பிரதேசமாக இருப்பதுடன் பரந்த பிரதேசத்தையும கொணடுள்ளது. இதனது மேற்கு நகராக்கம் பெற்ற பகுதியாக இருக்க கிழக்குப் பகுதி மக்கள தொகை குறைந்த விவசாயப் பகுதியாக இருக்கின்றது. நெற்செய்கைப் பரப்புக்கள் தெனனந்தோட்டங்கள், பனை வளவுகள் ஆகியன முக்கியமானவைகளாகும.

கிழக்கு அரியாலை முளங்கிலிருந்து மேற்கு அரியாலையின் மேற்கெல்லை 7 கிலோ மீற்றருக்கு மேற்பட்டு இருக்கின்றது. இப்பிரதேசம் 1995ஆம் ஆண்டு யுத்தத்தாலும் 2000ஆம் ஆண்டு யுத்தத்தாலும் பெரும் அழிவுக்குட்பட்டுள்ளது. கிழக்கு அரியாலை இன்றும் உயர் பாதுகாப்பு பிரதேசமாக இருக்கின்றது.

அரியாலை மக்களின் நீண்டகால கோரிக்கையை கருத்திற்கொண்டும், புனர்வாழ்வு, புனருத்தாரணம் ஆகியவற்றை மனதிற்கொண்டும் அரியாலைக்கு புதிய பிரதேச/ உதவி அரசாங்க அதிபர் பிரிவு உருவாக்கப்பட வேண்டும்.

தற்போதுள்ள யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து புதிய அரியாலை பிரிவு உருவாக்கப்பட வேண்டும். இதன்மூலம் நல்லூர், யாழ்ப்பாண பிரதேச செயலகங்கள் இன்று எதிர்நோக்கும் பணி அழுத்தங்கள் குறைய வழியேற்படும்.

### புங்குடுதீவு - நயினாதீவு

தீவுகள் தெற்கு பிரதேச செயலகப் பிரிவு அமைக்கப்பட்ட பொழுது இதன் செயலகக் காரியாலயத்தை புங்குடுதீவில் அமைக்க வேண்டுமென புங்குடுதீவு - நயினாதீவு மக்கள் கோரிக்கை விட்டனர். எனினும் அன்றைய ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா.பொ.இரத்தினம் தீவுகள் தெற்கு பிரதேச செயலகத்தை வேலணையில் வங்களாவடியில் அமைத்தார். வேலணை வங்களாவடி ஒரு சிறு நகராக விருத்தி பெற வேண்டுமென விரும்பி நின்றார். இவர் கால கிரமத்தில் புங்குடுதீவு - நயினாதீவு புதிய பிரிவு உருவாக்கித் தருவதாக கூறியிருந்தார். அதற்கான முயற்சிகளிலும் அன்று ஈடுபட்டிருந்தார்.

கடந்த இரு தசாப்தங்களாக விளங்கிய நாட்டுச் சூழ்நிலையில் புங்குடுதீவு மிகப் பெரிய பாதிப்பை எதிர்கொண்டது. 1991இல புங்குடுதீவு மக்கள் முற்றும் முழுதாக வெளியேறி நாட்டினதும் உலகின் பல பகுதிகளுக்கும் இடம்பெயர்ந்து சென்றனர். கிராமம் பாழடைந்தது. மெய்யாதனங்கள் பெரு அழிவுக்குட்பட்டுள்ளன.

இன்று மக்கள் மீளக் குடியேறிக் கொண்டு இருப்பதுடன் பிற இடங்களைச் சேர்ந்த குறிப்பாக மீனவக் குடும்பங்களும் அங்கு குடியேறிக்கொண்டிருக்கின்றனர். மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, அபிவிருத்தியை துரிதமாக முன்னெடுக்கவும் இத்தீவுகளுக்கு தனியானதொரு நிர்வாகப் பிரிவு தேவையென உணரப்படுகின்றது.

நயினாதீவு சமய முக்கியத்துவம் பெற்ற இடமாகும். இங்கு நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயமும் பௌத்த விகாரையும் இருப்பதால் பெரும எண்ணிக்கையான மக்கள் தூர இடங்களிலிருந்து இங்கு வருவது கவனிக்கத்தக்கது.

ஆகவே தீவுகள் தெற்கு பிரிவு வேலணை - புங்குடுதீவு - நயினாதீவு என இரு பிரிவுகளாக்கப்படவேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்குறிப்பிட்ட பிரதேச மக்கள் புதிய நிர்வாகப் பிரிவுகள் அமைக்கப்பட வேண்டுமெனக் கோரி வருகினறனர். இப்பிரிவுகள் யாவும் உடனடியாக ஏற்படுத்த முடியாதுவிட்டாலும், முன்னுரிமை அடிப்படையில் படிப்படையாக அமைக்கப்படலாம்.

குறித்த பிரதேச மக்களின் நிர்வாக அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் இவர்கள் தங்கள் பிரதேச அபிவிருததியில் நேரடியாகப் பங்குகொள்ளும் வாய்ப்பும் கூடுதலாகக் கிடைக்கும். தூரத்தில் இருக்கும் நிர்வாக கட்டமைப்பு மக்களுக்கு அருகில் செல்லும்போது அதனால் நன்மைகள் பல கிட்டுவதுடன் மன நிறைவும் கிட்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தென்மராட்சி கிழக்கிற்கு புதிய பிரதேச செயலகம் அமைப்பது முன்னுரிமையாக இருக்க வேண்டும். தீவுகள் வடக்கு, நெடுந்தீவு, வடமராட்சி கிழக்கு, காரைநகர் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள், பிரதேச செயலகப் பிரிவுகளாக் மாற்றப்படவேண்டும்.

வடமராடசி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு பிரதேச சபையும் உருவாக்கப்பட வேண்டும். புதிய பிரிவுகள் உடனடியாக உருவாக்க முடியாதுவிட்டால் உபகாரியங்கள் அமைபபு, விரிவாகக சேவை மூலம் மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும். வளங்கள இல்லாத உபகாரியங்கள் அமைப்பு தோல்வியிலேயே முடியும். □

**-பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை**

---

## மறவன்புலவில் பயிர்ச் செய்கைக்கு இராணுவத் தரப்பினர் அனுமதி

(பொன்னாலை)

தென்மராட்சி தெற்கு மறவன்புலவு வடக்கில் படையினரால் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி வழங்கப்படவுள்ளது.

மறவன்புலவு வடக்கில் உள்ள சில பிரதேங்களில் இருக்கும் விளைநிலங்கள் சிலவற்றை ஏற்கனவே விடுவித்திருந்த படையினர் அங்கு பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான அனுமதிகள் எதையும் வழங்கவில்லை.

இதனால் தாம் பாதிக்கப்படுவதாக சுட்டிககாடடி விவசாயிகள் விடுத்து வந்த கோரிக்கைகளை அடுத்து இவ்வாரம் தொடக்கம் இப்பகுதியில் பருவகால நெற்செய்கைகளுக்கான நடவடிக்கைகளை விவசாயிகள் ஆரம்பிக்கலாம் என இராணுவததினா அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரியவருகிறது. (ற-49)

## கட்டுநாயக்க விமான தளம் ஊடாக நிதி மோசடி; 3 அதிகாரிகள் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான தளத்தின் மூலம் நிதி மோசடிகளில் ஈடுபட்டுவந்த வானவூர்தி மையத்தின் 3 பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளதாக சுங்கப் பிகுதி அதிகாரி அப்துல்ல லங்கா தேரர் தெரிவித்துள்ளார்.

குறித்த பாதுகாப்பு அதிகாரிகள் மூவரும் உல்லாசப் பயணி ஒருவரின் மூலம் சுமார் 3 கோடி ரூபாவை சிங்கப்பூருக்கு அனுப்ப முயற்சித்த போதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பாதுகாப்பு அதிகாரிகள் கடந்த 3 வருடங்களாக இவ்வாறான நிதி மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இதன்போது பாதுகாப்பு அதிகாரிகள் பயன்படுத்திய வாகனம் ஒன்றும் சுங்கத்துறையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ற-9)

## யு.என்.எச்.சி.ஆர் வீடுகள் அமைப்பு

(பொன்னாலை)

இளவாலை வடக்கில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தின் ஏற்பாட்டில் 33 வீடுகள் அமைத்துக் கொடுக்கப் படவுள்ளன.

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் வீடுகளை இழந்த அல்லது வீடுகள் சேதமடைந்தவர்களுக்கே இம் 33 வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ள

இவ் வீடமைப்புத் திட்டத்திற்கான பயனாளிகள் பாதிப்புகளுக்கு ஏற்ப முன்னுரிமைப்படுத்தப்பட்டே திட்டத்தினுள உள்வாங்கப் படவுள்ளனர்.

இப் பயனாளிகள் தெரிவின் போது வீட்டுப் பாதிப்பு, குடும்ப அங்கத்தவர்களது எண்ணிக்கை பொருளாதார நிலைமை என்பன கவனத்தில் எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்

## பண்ணைப் பகுதியில் நிர்மாணிக்கப்படும் காசநோய் வைத்தியசாலை 30 ஆம் திகதி திறக்கப்படும்

(பொன்னாலை)

யாழ்.பண்ணைப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் காசநோய் வைத்தியசாலை எதிர்வரும் 30ஆம் திகதி மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்படவுள்ளது.

வடக்கில் காசநோய் சிகிச்சைகளைத் திருப்திகரமாக வழங்குவதற்கு ஏற்ற வைத்தியசாலை ஒன்று இல்லாமையால் இப்பகுதிகளிலுள்ள காச நோயாளர்கள் தமக்கான சிகிச்சைகளைப பெற்றுக்கொள்ள முடியாத அவல நிலை காணப்பட்டு வந்தது.

இந்த நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு உலக வங்கியின் 18.7 மில்லியன் ரூபா நிதியுதவியில் யாழ்.பண்ணைப் பகுதியில் காசநோய் வைத்தியசாலை நிர்மாணிக்கப்படுகின்றது.

இவ் வைத்தியசாலையின் கட்டட நிர்மாணப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருவதாக பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ற-49)

## தீவகத்துக்கான சேவையில் ஈடுபட பேருந்துகளுக்குப் பற்றாக்குறை

(பொன்னாலை)

தீவகத்திற்குத் திருப்திகரமான போக்குவரத்துச் சேவைகளை நடாத்துவதற்கு பேருந்து பற்றாக்குறை பெரும் பிரச்சினையாகவுள்ளதென வடபிராந்திய போக்குவரத்துச்சபை பொது முகாமையாளர் கே.கணேஷபிள்ளை தெரிவித்துள்ளார்.

தீவகத்தின் பல பகுதிகளுக்கும் திருப்திகரமான பேருந்துப் போக்குவரத்துச் சேவை நடத்தப்படுவதில்லையென பொதுமக்கள் விசனம் தெரிவித்து வருகின்றனர். அத்துடன் தீவகத்தின் பல இடங்களுக்கும் பேருந்துச் சேவையை நடாத்துமாறும் கோரிக்கை விடுத்த வண்ணமுள்ளனர்.

இத்தகைய மக்களது தேவைப்பாடுகளை கவனத்தில் எடுத்து தீவகப் பகுதிக்கு திருப்திகரமான பேருந்துச் சேவையை நடத்த போதியளவு பேருந்துகள் இல்லாமை பெரும் பிரச்சினையாகவுள்ளது.

மாக பொதுமக்கள் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். யாழ்.மாவட்டத்தில் நிலவும் பேருந்து தேவைப்பாடுகள் பற்றி கோரிக்கை விடுத்த போதும் அரசு இதுவரை உரிய நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லையென அவர் மேலும் தெரிவிததுள்ளார். (ற-49)

## சுந்தரர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலய சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்கோயிலிலும் பிற்பகல் 4.00 மணிக்கு நல்லூர் ஸ்ரீ சட்டநாதஸ்வாமி தேவஸ்தானத்திலும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை வைபவத்தை மிகச் சிறப்

# தமிழகப் பயணம்

பயணக் கட்டுரை

# தமிழகத்தில் இப்படியும் திருமண அழைப்பிதழ்

**என்.விஜயன்**

(47) பெஷன் நகரில் அஷ்ட லக்ஷ்மி கோவிலிலும், அறுபடை வீடு முருகன் கோவிலிலும் தரிசனத்தை முடித்துக்கொண்டு திரு. விக்டர் செல்வத்தின் வீட்டிற்குச் சென்றிருந்தோம்.



திருமண அட்டையின் முகப்புத் தோற்றம்.

விக்டர் செல்வம் தன்னிடம் உள்ள ஈழத்து அரசியல் வரலாற்றுப் பதிவுகளை எமக்குக்காட்டி திருப்தியடைந்து கொண்டார்.

தன்னிடம் உள்ள பத்திரிகை நறுக்குகள் மற்றும் சஞ்சிகைக் கட்டுக்களைக் காட்டியபோது அதில் திருமண அழைப்பிதழ் என்ற அட்டை என் கண்ணுக்குத் தெரிந்தது. தமிழகத்தின் திருமண அழைப்பிதழைப் பார்க்க வேண்டும் என்பதற்காக அந்த அழைப்பிதழை எடுத்துப் பார்த்தேன். ஆச்சரியமாக இருந்தது.

திருமண அழைப்பிதழ் என எழுதப்பட்டிருந்த அந்த அட்டையில் கலைஞர் கருணாநிதி, பேராசிரியர் அன்பழகனுடன் மேலும் இருவரின் வர்ணப் புகைப்படங்கள் காட்சி கொடுத்தன. திருமண அழைப்பிதழின் முன் அட்டையில், மேற்குறிப்பிட்ட நான்கு பேரின் புகைப்படங்களுடன் செல்வன்: இரா.சுரேந்திரன் செல்வி: மு.பா.ம.பிரியவர்த்தினி என மணமகனினதும், மணமகளினதும் பெயர்கள் குறிக்கப்பட்டிருந்தன. Date-09.03.2005 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

21.5செ.மீ. நீளமும், 54செ.மீ. அகலமும் கொண்ட அந்த திருமண அட்டை மூன்றாக மடிக்கப்பட்டிருந்தது. முகப்புத் தோற்றத்தைப் பார்த்தவுடன் மேலதிக தகவல்களுக்காக திரு.விக்டர் செல்வத்தை நோக்கினேன்.

என் ஆவலை குறிப்பாலுணர்ந்த அவர், திமுக தொண்டர் ஒருவரின் மகனின் திருமண அழைப்பிதழ் என்றார்.


திமுக. தொண்டரின் மகனின் திருமண அழைப்பிதழ் என்பதற்காக கலைஞரின் படத்தைப் பிரசுரிக்க வேண்டுமா? என்ன? எனக்குள் பொங்கி எழுந்த கேள்வியை விக்டரிடம் கேட்க வேண்டும் போல இருந்தாலும், திரு விக்டர் திமுகவின் மிக விசுவாசமான தொண்டர்.

அப்படியானவரிடம் என்னுள் எழுந்த கேள்வியைக் கேட்பது நயத்தக்க நாகரிகம் பேணுவார்க்கு அழகல்ல, என்பதால் அதை விடுத்து, அவரின் பதிலுக்குத் தலையை மெல்ல அசைத்துக்கொண்டேன்.

21ஆம் நூற்றாண்டில் இப்படி ஒரு திருமண அழைப்பிதழா? இது கட்சிமீது கொண்ட பாசமா? அல்லது அறியாமையின் உச்சமா? எதை நினைப்பது குழப்பமே என்னை ஆக்கிரமித்துக்கொண்டது.

## எமது மண்ணில்...

அந்தத் திருமண அழைப்பிதழ் என் கைகளில் இருந்த போதிலும் என் நினைப்புகளெல்லாம் யாழ்ப்பாணத்தின் உயர்ந்த கலாசாரத்தையே எண்ணிக் கொண்டது.


திருமண அட்டையின் இரண்டாம் பக்கம்.

திருமண அழைப்பிதழ்

அன்புடையீர் வணக்கம்!
வளரும் திருவள்ளுவராண்டு 2035 மாசித் திங்கள் 25ம் நாள் 9.3.2005 புதன்கிழமை காலை 9.30 மணியளவில்.

| | |
|---|---|
| சென்னை-50, பாடி, பாண்டுரங்கபுரம் முத்து மாரியம்மன் கோயில் தெரு எங்கள் நினைவில் வாழும் P.S. அய்யாவு அவர்களின் பேரனும் இராசேந்திரன்-சூரியா அவர்களின் மூத்த மகனுமான அன்புச் செல்வன் | எங்கள் நினைவில் வாழும் சிங்கம்பாளையம் எண்-450ல் வாழ்ந்த மு.மு. பழனையாண் (TNEB) அவர்களின் பேத்தியும் சென்னை கொளத்தூர் கண்ணகி நகர் 180 சர்ச்தெருவில் வசிக்கும் மு.பா. மகேந்திரமணி-ரேவதி அவர்களின் இளையமகள் அன்பு செல்வி |
| இரா. சுரேந்திரன் | மு.பா.ம. பிரியவர்த்தினி |

இவர்களின் திருமணம் பாடி, சென்னை – 50. M.T.H. சாலை எண். 881 மகேஸ்வரி திருமண மண்டபத்தில் கழக பொதுச்செயலாளர் இனமான பேராசிரியர் அவர்களின் உயரிய தலைமையில் நடைபெற இருப்பதால் உறவினர்களும், நண்பர்களும் வருகை தந்து மணமக்களை வாழ்த்துமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| அவ்வண்ணமே கோரும் | அ. இராசேந்திரன் |
| மு.பா. மகேந்திரமணி | (41 வட்ட) வெள்ளிவிழா செயலாளர் |
| (சென்னை மாநகர காவல் துறை) | மு. அறங்காவலர் |
| ரேவதி மகேந்திரமணி | பாடி படவட்டம்மன் கோயில் |
| கொளத்தூர், சென்னை | செல்வி இராசேந்திரன் |
| | பாடி, பாண்டுரங்கபுரம் |

மாப்பிள்ளை அழைப்பு : 8.3.2005 செவ்வாய்கிழமை மாலை 6.00 மணிக்கு
இரவு 8.00 மணிக்கு பிரகாஷ் ரிதம்ஸ் இன்னிசை நிகழ்ச்சி
முகூர்த்தம் : புதன்கிழமை காலை 9 மணிக்கு

தங்களை அன்புடன் எதிர்நோக்கும்
D. இரகு காயத்திரி, R. ரஜினி குமார் B.Com.
R. கதிரவன், G. மதன் குமார், G. மகேஸ் குமார்

யாழ்ப்பாணத்துத் திருமண அழைப்பிதழ் என்றால் அதன் முன் பக்கத்தில், விநாயகனின் படத்தைப் பொறித்திருப்போம். இறைவனின் துணையோடு இல்வாழ்க்கையை ஆரம்பிக்கின்றோம் என்பதன் அடையாளமாகவே விக்கினம் தீர்க்கும் விநாயகனை திருமண அழைப்பிதழின் முகப்பில் பொறித்து விடுகின்றோம்.

இந்நிலைமை தற்போது சற்றுப் பிறழ்வடைந்து மணமகன், மணமகள் இணைந்திருக்கும் புகைப்படங்களைப் பொறிக்கும் கலாசாரமும் நடைமுறைக்கு வந்துள்ளது.

பரவாயில்லை. திருமணம் செய்து கொள்பவர்களின் படங்களை பிரசுரிப்பதுகூட, நியாயமானதெனக் கொள்ளலாம்.

ஆனால், இன்னொருவரின் திருமண அழைப்பிதழில், கலைஞர் கருணாநிதியின் படத்தைப் பிரசுரிப்பதை எவ்வகையில் நியாயப்படுத்த முடியும். இவை என்னுள் எழுந்த குழப்பத்தின் கலவையாக இருக்க, திருமண அழைப்பிதழின் அடுத்த பக்கத்தைப் புரட்டினேன் . அந்தப் பக்கத்தில் மணமகனினதும், மணமகளினதும் புகைப்படங்கள்.

அன்புடையீர் வணக்கம்!

வளரும் திருவள்ளுவராண்டு 2035 மாசித் திங்கள் 25ஆம் நாள் 9.3 2005 புதன்கிழமை காலை 9.30 மணியளவில்... என்ற அழைப்பிதழ் வாசகம்.

இந்த வாசகத்தின் அமைப்பை நாமும் பின்பற்றுகின்றோமயினும் யாழ்ப்பாணத்துத் திருமண அழைப்பிதழ்களில் வள்ளுவராண்டு என்பது குறிக்கப்படுவதில்லை. மாறாக, தமிழ்வருடம், நட்சத்திரம், லக்கினம் என்பனவற்றை சேர்த்துக்கொள்வோம்.

இது இறைநம்பிக்கை-சமய நம்பிக்கை கொண்டவர்களின் சம்பிரதாயம். இவற்றைத் திராவிட முன்னேற்றக் கழகத்தில் எதிர்பார்க்க முடியாது.

## மாசி மாதத்தில் திருமணம்

நாள், நட்சத்திரம் எல்லாம் கடந்து கலைஞர் கருணாநிதியையே கடவுளாகப் பாவனை செய்து நடத்தப்படும் அந்தத் திருமணம் தமிழ் மாதம் மாசியில் நடந்ததென்பது மற்றுமோர் தகவல்.

தை, பங்குனி மாதங்களில் திருமணம் செய்வதே சாத்திர வகுமுறை. மாசியில் திருமணம் செய்வது வழக்கமிலாதிருந்த போதிலும் சாத்திர சம்பந்தங்களில் கடும் எதிர்ப்பைக் காட்டும் திமுக, தனது கட்சித் தொண்டர்களுக்கெல்லாம் நாள், நட்சத்திரம் பார்க்கக் கூடாதெனக் கண்டிப்பாகக் கூறிவைத்துள்ளது போலும். (வளரும்)

# சர்வதேசத்திடம் பந்து; அடுத்தது என்ன?

அமைதிவழியிலான பேச்சுவார்த்தைகள் முடங்கிப்போய்விட்டன. முடங்கிவிட்டன என்று கூறுவதிலும் பார்க்க தோல்வியடைந்து விட்டன என்று குறிப்பிடு வதே பொருத்தமானது.

1833ம் ஆண்டு வெள்ளைக்காரரால் இலங்கைத்தீவில் ஒற்றையாட்சி முறை புகுத்தப்பட்டு தமிழர் தாயகம்



சிங்கள தேசத்தோடு இணைக்கப்பட்டதோடு தமிழ ரின் இறைமை பறிக்கப்பட்டது. எனவே தமிழர் தாயகத்தில் வாழும் மக்களது சகல உரிமைகளும் பறிக்கப்பட்டமைக்கு முதற் காரணமானவர்களான வெள்ளைக்காரர்களே இருந்துள்ளனர்.

பல்வேறு அமைதி முறையிலான போராட்டங்க ளும் தோல்வியடைந்த நிலையிலேயே தமிழ் மக்கள் கடந்த 20 வருடங்களாக ஆயுதமேந்தி போராடி வருகின்றனர். அந்த ஆயுதப் போராட்டத்தை தற்போது வெள்ளைக்காரர்களே இடைநிறுத்தி வைத்துள்ளனர்.

அதாவது இலங்கைத்தீவில் நிலவும் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வை விரும்புவதாகக் கூறும் அனைத்துலக சமூகத்தினர்.

மூன்று வருடகாலமாக தெடர்ச்சியாக யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு பேச்சு வார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு தற்போது நின்று போயுள்ளது. எனினும், யுத்தம் மீண்டும் மூளவில்லை.

யுத்தம் மூளக்கூடிய வாய்ப்புகள் முனைப்



புப்பெறும் வேளைகளில் எல்லாம் அனைத்துலக சமூகமே அதனைத்தடுத்து நிறுத்திவிடும் முயற்சியில் ஈடுபடுகின்றது அல்லது யுத்தத்தை தள்ளிப்போடும் வகையில் காய்களை நகர்த்திவருகின்றது.

### பந்து சர்வதேசத்திடம்

நிழல் யுத்தம் போராளிகள் மீதும் பொதுமக்கள் மீதும் ஒருபுறம் நடை பெற்றுக் கொண்டிருக்க, சிங்களப் பேரினவாத அமைப்புக்களின் தமிழர் விரோத கடும் போக்கு ஒரு உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. இவ்வாறான தொரு சூழலில் மீண்டும் யுத்தம் ஒன்று மூள்வதற்கான நிலைமைகளே அதிகம் காணப்படுகின்ற போதும் யுத்தம் தள்ளிப் போய்க் கொண்டே இருக்கின்றது.

இதற்குக் காரணம் இலங்கை விவகாரங்களில் அதிக ஈடுபாடு காட்டி வரும் உலக நாடுகள் தான். தமிழ் மக்களின் கோணத்தில் இருந்து பார்த்தால் 'பந்து' இப்போது உலக நாடுகளின் கைகளில்தான் இருக்கின்றது. அதனால்தான் கடந்த 27ம் திகதி வவுனியா மாநாட்டின் தமிழ்மக்கள் எழுச்சிப் பிரகடனம் உலகநாடுகளை நோக்கி அமைந்தது.

தமிழ் மக்கள் ஸ்ரீலங்கா அரசுகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு எதுவு மில்லை. சிங்கள அரசு தமிழ் மக்களுக்கு உரிமைகளை மட்டு மல்ல சாதாரண சலுகைகளைக் கூட தரப்போவதில்லை என்பதில் தமிழ் மக்கள் நூறு வீதம் தெளிவாகவே உள்ளனர்.

ஸ்ரீலங்கா அரசின் உண்மைத் தோற்றத்தை அனைத்துலக சமூகத்திற்கும் தோலுரித்துக் காட்ட வேண்டிய அவசியம் கருதியே மூன்றரை வருடங்களாக தமிழர் தரப்பால் யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கபட்டு வருகின்றது.

### கழுதை தேய்ந்து கட்டெறும்பானது

ஸ்ரீலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் போரை நிறுத்தி அமைதிவழியில் பேச்சுவார்த்தைகளை மேற் கொண்டு தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என உலக நாடுகள் - இலங்கைக்கு உகவி வமங்கும் நாடுகள் வற் புறுத்தின. எதை நோக்கி பேச்சுவார்த்தை நடாத்துவது என்பது தொடர்பாக ஒஸ்லோவில் ஒரு உடன்பாடும் எட்டப்பட்டது. அதன்படி சீரான ஒழுங்கில் எந்தவொரு விடயமும் நடைபெறவில்லை.

நிரந்தரத் தீர்வு பற்றி பேசுவதற்கு முன்பு போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்ட சிரான் என்கின்ற அமைப்பு கூட சட்டப் பிரச்சினைகளால் தோல்வி கண்டது.

பின்னர் விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக முன்வைப்புக்களும் முடங்கிப் போய் விட்டன. இடையில் சுனாமி வந்ததால் சுனாமிக்கான பொதுக்கட்டமைப்பு என ஆறு மாதங்கள் கடத்தப்பட்டன. அப்பொதுக்கட்டமைப்பு கைச்சாத்தாகியும் அதன் செயற்பாடு ஸ்ரீலங்காவின் உயர் நீதிமன்றத்தால் முடக்கப்பட்டு விட்டது. விடுதலைப் புலிகளுக்கான பயண ஒழுங்குகளுக்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் உத்தரவாதம் வழங்க வேண்டும் என்கின்ற விடயமே தற்போது பேச்சுவார்த்தைக்குரிய விடயமாக உள்ளது.

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையிதுதான்!

### படைகளை பலப்படுத்தும் அரசாங்கம்

போர் நிறுத்த கால இடைவெளிக்குள் ஸ்ரீலங்கா அரசு பல காரியங்களை மேற்கொண்டுள்ளது. இராணுவ நிலைகள் மட்டுமல்லாது அரசின் பல்வேறு அமைப்புகளும் கூட



விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு எந்நேரமும் இலக்காகக் கூடும் என்கின்ற பயக்கெடுதியில் இருந்த அரசாங்கம் தற்போது காவகாசமாக தனது படைநிலைகளைப் பலப்படுத்தி வருகின்றது.

ஆயுதங்களையும், கப்பல்களையும், விமானங்களையும் வாங்குகின்றது. அமெரிக்கா இந்தியா உட்பட பல்வேறு நாடுகளிடமிருந்து இராணுவ நிபுணர்களின் ஆலோசனைகளையும் படையினருக்கான விசேட பயிற்சிகளையும் பெற்று வருகின்றது.


ஸ்ரீலங்காவின் புலனாய்வுப் படையினர் நிழல் யுத்தம் ஒன்றை போராளிகள் மீதும் பொதுமக்கள் மீதும் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

இருபது வருட காலப் போரினால் நலிவுற்ற தமிழ் மக்கள் தங்கள் இயல்பு வாழ்வை கட்டியெழுப்ப முடியாமல் தவிக்கின்றனர். உயர் பாதுகாப்பு வலயம் என்ற பேரில் ஸ்ரீலங்காப் படையால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்படாமல் உள்ளன. பல ஆண்டு காலமாக சொந்த வாழ்விடங்களுக்குத் திரும்ப முடியாமல் அல்லலுறும் மக்கள் விரக்தி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந் நிலையில், ஆயுதப் போராட்டத்தை தீவிரமாக முன்னெடுத்தால்தான் தமிழ்மக்கள் தொலைந்த வாழ்விடங்களை மீட்டெடுக்க முடியும். தங்கள் வாழ்வையும் தற்காத்துக் கொள்ள முடியும் என்பது தான் இன்றிருக்கும் உண்மையான நிலை.

### தமிழ் மக்களின் நிலைப்பாடு

இதையெல்லாவற்றையும் விடவும், போராட்டம் இடைநடுவில் நின்றால் அல்லது இன்னமும் இழுபட்டுப்



போனால் அடுத்த சந்ததியும் கொடிய யுத்தத்தை எதிர் நோக்க வேண்டி வரும் என்கின்ற பயமும் தமிழ் மக்களிடம் இருக்கின்றது.

இந்த யுத்த நிறுத்த காலம் தமிழர் தரப்பிற்கு அனைத்துலக ரீதியில் ஒரு அங்கீகாரத்தை வழங்கியிருப்பதும் தமிழ் மக்களின் பிரச்சினைகளின் ஆழத்தை அனைத்துலகத்திற்கு புரியவைத்திருப்பதும் தான் தமிழ்மக்களுக்கு கிடைத்திருக்கும் ஒரேயொரு நன்மை.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் பயணப் பாதுகாப்பிற்கு ஸ்ரீலங்கா அரசு புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இலங்கையின் அமைதி முயற்சிகளுக்கான இணைத் தலைமை வழங்கும் நாடுகள் குரல் கொடுத்திருப்பதும் - விடுதலைப் புலிகளுடன் அமெரிக்கா நேரடித் தொடர்புகளைப் பேண வேண்டும் என இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் சமீபத்தில் கருத்து வெளி யிட்டிருப்பதும் - விடுதலைப் புலிகளின் அமைதி வழி நடவடிக்கை



களுக்கு அமெரிக்கர்கள் சட்டரீதியாக உதவலாம் என லொஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருப்பதும் தமிழ் மக்களுக்கு ஆறுதலளிக்கக்கூடிய விடயங்கள் தான்.

தமிழர்தரப்பை சாந்தப்படுத்தும் விதத்தில் இவ்வாறான கருத்துக்கள் வந்து கொண்டிருக்கும் சமகாலத்திலேயே அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த ஆறு அதிகாரிகள் இரகசியமாக யாழ்ப்பாணத்திற்கு வந்து ஸ்ரீலங்கா இராணுவத்தின் படைமுகாம்களை பார்வையிட்டுள்ளனர். படையதிகாரிகளுக்கு ஆலோசனைகளையும்

**இணையப்பார்வை**

வழங்கியுள்ளனர்.

யுத்தம் தமிழ் மக்கள் மீது திணிக்கப்படும் சூழலில் அதனை எதிர்கொள்ள தமிழர் தரப்பு முனைப்புறும் வேளைகளில் அதனைத்தடுக்கும் இராஜதந்திரமாக - தந்திரோபாயமாக - காய்நகர்தலாக உலகின் குரல்கள் அமையாமல் உண்மைக்கப்பாற்பட்டு குரல்கள் ஒலிக்க வேண்டும்.

தமிழீழ மக்களின் உரிமையை மீட்க உலகம் வழங்கும் உறுதிமொழி என்ன என்கின்ற கேள்விக்கான பதிலையேஅனைத்துலக சமூகத்திடம் தமிழ் மக்கள் தற்போது எதிர்பார்க்கின்றனர். □

## பொதுமக்கள் வன்முறைகளில் ஈடுபடும் போது புலிகள் அதனை தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

### -இராணுவப் பேச்சாளர் தயா ரட்நாயக்க

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் சில கவலைக்குரிய சம்பவங்கள் இடம்பெறுகின்ற வேளைகளில் மக்கள் வன்முறைச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறான செயல்களில் ஈடுபடும் மக்களை தடுக்கும் விடுதலைப் புலிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரட்நாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், இணுவில் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு மீண்டுமொரு யுத்தம் ஏற்பட இராணுவம் ஒருபோதும் தயாரில்லை.

அதேவேளை, அப்படி எந்தவொரு இராணுவ வீரராவது, சமாதான உடன்படிக்கையை மீறி, யுத்தம் ஒன்றை மீண்டும் எற்படுத்த முயற்சிப்பாராயின் அவருக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

இணுவில் சம்பவத்துடன் தொடர்புபட்டு தற்போது கைதாகியுள்ள இராணுவ வீரர்கள் மீது விசாரணைகளின் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும். இந்த சம்பவங்கள் தொடர்பாக இராணுவம், பொலிஸ் ஆகிய இரு தரப்புகளும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர் என்றார். (ற)

## வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

(பலாங்கொடை)

பலாங்கொடை எல்லப்பொலப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

முச்சக்கரவண்டி ஒன்றும் கார் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதிலே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

நேற்றுக்காலை 3.00 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்தில் காயமடைந்த இருவர் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த நபரே உயிரிழந்துள்ளார். (ற-9)

# இன்று ஒரு தகவல்

## விஸ்வரூபம்

மகாபாரதத்தில் கண்ணனும், கந்தபுராணத்தில் முருகப்பெருமானும், இராமாயணத்தில் அநுமானும் விஸ்வரூபம்(திருப்பெரு வடிவம்) எடுத்ததாக நாம் படிக்கின்றோம்.

கண்ணபிரான் தன் விஸ்வரூபத்தைப் போர்களத்திலே அதர்மம் அழிந்து தர்மம் தலைகாக்கவென அருச்சுனனுக்குக் காட்டியதாகவும், கந்தபுராணத்திலே ஆணவமலத்தை அடக்குவதற்காக சூரபத்மனுக்கு முருகப்பெருமான் விஸ்வரூபமாகிய திருப்பெருவடிவத்தைக் காட்டியதாகவும், இராமாயணத்திலே பேராசையால் நெறிதவறிய இராவணனுக்கு இராமதூதனாக வந்த அநுமான் விஸ்வரூபத்தைக் காட்டியதாகவும் நாம் படிக்கவும்,கேட்கவும் முடிகின்றது.

இந்த விஸ்வரூபங்கள் யாவும் மக்களுக்கு நல்ல பாடங்களைப் புகட்டுவனவாக உள்ளன. அறநெறி வழி தவறியவர்களால் ஏற்படக்கூடிய பல்வேறு தவறான போக்குகளையும் தெய்வீக வல்லமை கொண்டோர் எப்படி? எப்படி? அணுகி அவற்றிற்கு நல்ல முடிவு காண்கின்றார்கள் எனும் அருமையான நல்ல படிப்பினைகளையும் விஸ்வரூபங்கள் எமக்கு எடுத்துப் புகட்டுவனவாகவுள்ளன.

சதாதாரண குடும்ப வாழ்க்கையிலும் சிலருக்குக் கோபம் வந்தால் அவர்கள் பேச்சாலும் செயலாலும் விஸ்வரூபம் கொள்வார்கள். அந்தநேரம் அவர்களைப் பார்ப்பவர்கள் நீ உன் விஸ்வ்ரூபத்தைக் காட்டாதே. உன் வேலையைப் போய்ப்பார் எனக் கடிந்து கொள்வதை மக்கள் வாழ்க்கையிலே அன்றாடம் கேட்கக் கூடியதாயுள்ளது.

திருவள்ளுவப் பெருந்தகையும் திருக்குறளிலே "வலியார் முன் தன்னை நினைக்காதான் தன்னில் மெலியார் மேல் செல்லுமிடத்து" என ஈரடிக் குறட்பாவினால் அழகாகக் கூறியுள்ளார். தன்னில் வலியர்ரைக் கண்டு அஞ்சிப் பதுங்குபவர்கள், தன்னிலும் மெலியாரைக் கண்டவிடத்துத் தான் பெரிய வல்லமை படைத்தவன் போல நிற்ப்து கேலிக்குரியதன்றோ.

மக்களுக்கு நல்லறிவும், நல்லுணர்வும் ஊட்டுவதற்காகவே தான் பலதரப்பட்ட சோதனைகள், வேதனைகளுக்கெல்லாம் முகங்கொடுத்த பின் இறுதி நன் முயற்சியாகத் தீவினை செய்பவர்களையும் நல்வழிப்படுத்த வேண்டி கண்ணனும், முருகனும், அநுமானும் விஸ்வரூபம் எடுத்தனர் என்பது பாரதம்,கந்தபுரணம், இராமாயணம் ஆகியவற்றைப் படிப்பவர்களுக்கு புலனாகும்.

இன்று எம்மிடையே விஸ்வரூபம் எடுப்பவர்கள் அநேகம் உள்ளனர். ஆயினும் அன்புள்ளங் கொண்ட பெற்றோர் பிள்ளைகளிடமும், பெரியோர் சிறியோரிடமும், ஆசிரியர் மாணவரிடமும் விஸ்வரூபங் காட்டுவதன் மூலம் மற்றோரை நல்வழிப்படுத்தி சமூகத்தை மேன்மையடையச் செய்தல் அவசியமாகும்.

பக்கத்து வீட்டுச் சிறுவர்கள் கூடி விளையாடி ஒருவரோடொருவர் ரகளை செய்தபோது அவர்களை சமாதானப்படுத்த முயன்ற தாயார் அவர்கள் கட்டுப்படாததைக் கண்டு "அதோ அப்பா வருகிறார் அவரது விஸ்வரூபத்திற்கு நீங்கள் ஆளாகப் போகிறீர்கள்" எனப் பயமுறுத்திய போது அங்கே நின்ற பெரிய பையன் சொன்னான் "விஸ்வரூபம் எடுத்தால் நல்லதுதானே எல்லோருக்கும் நல்லறிவுண்டாகத்தானே முருகனும் விஸ்வரூபம் எடுத்தவர்.

அப்பா விஸ்வரூபம் எடுத்தால் பிள்ளைகளும் திருந்தலாமல்லவா" என்று சொல்லிவிட்டு அப்பா வருவது கண்டு ஓடிப்போய் வீட்டினுள் அமைதியாக நல்ல பிள்ளையாக இருந்து படித்தான்.

**நீர்வைமணி**

# தாதிப் பயிற்சிப் பாடசாலை

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்டு தாதிப் பயிற்சிப் பாடசாலை ஒன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வெளிநாடுகளில் தாதிமார்களுக்கும், உதவியாளர்களுக்கும் அதிக தேவை இருப்பதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் உறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பயிற்சி ஆங்கில மொழியில் வழங்கப்படும். பயிற்சியை முடித்துக் கொள்பவர்களுக்கு சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்படும் [illegible]ன்றிதழ்கள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(அ-7)

# எம்.பிக்களுடனான சந்திப்புக்கு கண்டனம்; எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாதது

## -கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்

(கொழும்பு)

ஆழிப்பேரலையினால் ஏற்பட்ட பாதிப்புக்களை நேரில் கண்டறிவதற்காக இலங்கை சென்றிருந்த போதே வடபகுதியில் போரினால் ஏற்பட்ட அழிவுகளையும் இன்னல்களையும் நேரில் காணமுடிந்தது.

இவ் வாறு கடந்த வியாழக்கிழமை ரொறன்ரோவில் நடைபெற்ற தமிழ் வேட்பாளர் அறிமுக விழாவில் பேசிய கன்சர்வேட்டிவ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான பியரே பொலிவியர் தெரிவித்துள்ளார்.

கனடாவின முதல் இஸ்லாமிய நாடாளுமன்ற உறுப்பினர், முதல் ஜப்பானிய வழி நாடாளுமன்ற உறுப்பினர், முதல் இந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோரை அறிமுகப்படுத்திய பெருமை கன்சர்வேட்டிவ் கட்சியையே சாரும் எனவும் கன்சர்வேட்டிவ் கட்சி நாடாளுமன்றக் குழுவே சகல இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு முன்னுதாரணக் குழுவாகத் திகழ்கிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அவ்விழாவில் பிறிதொரு நாடாளுமன்ற உறுப்பினரான டீபக் ஓபராய் பேசுகையில,

கனேடிய பிரதமருடன் சென்ற நாடாளுமன்றக் குழுவில் தானும் இடம்பெற்று இலங்கை சென்றிருந்ததாகவும் அங்கிருந்த சமயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்ததாகவும், அந்த சந்திப்புக் குறித்து ஸ்ரீலங்கா அரசாங்கத் தரப்பிலிருந்து கண்டனங்கள் எழுந்ததாகவும் தெரிவித்ததோடு மக்களால் ஜனநாயக வழிமுறையில் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களையே சந்திப்பது கண்டனத்துக்குள்ளாவதை தன்னால் எந்தவிதத்திலும் நியாயப்படுத்த முடியவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

(ற)

## மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில்

# இனங்காணப்பட்ட 10 பாடசாலைகளை நவோதய பாடசாலைகளாக தரமுயர்த்துக!

## அடைக்கலநாதன் எம்.பி வேண்டுகோள்

(மன்னார்)

வன்னித் தேர்தல் தொகுதியில் நவோதயப் பாடசாலைத் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமென மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுவிடயம் தொடர்பில் அவர் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்,

2004ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து மேற்படி விடயம் தொடர்பாக மேன்மை தங்கிய ஜனாதிபதியிடமும் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி திருமதி தாரா டிமெல் அவர்களிடமும் கடிதம் மூலம் கோரிக்கை விட்டு வந்துள்ளேன்.

இவ் விடயம் தொடர்பாக என்னால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு வரையப்பட்ட 20.04.2005 திகதிய கடிதம் மேன்மை தங்கிய ஜனாதிபதிக்கும் தங்களுக்கும் பிரதி இடப்பட்டுள்ளது.

15.07.2005இல் இது விடயம் தொடர்பாக "நவோதய" பாடசாலைகளுக்குப் பொறுப்பான பணிப்பாளர் வை.ஏ.என்.டி. யாப்பாவை கல்வி அமைச்சில் அவரது காரியாலயத்தில் நேரடியாகச் சந்தித்தும் கலந்துரையாடினேன்.

நவோதயப் பாடசாலைகள் ஒரு பிரதேச செயலாளர் பிரிவிற்கு ஒரு பாடசாலை வீதம் மாணவர் தொகை,வேறு அம்சங்களுடன் கணிக்கப்பட்டுத தெரிவு செய்யப்பட்டு அந்தந்த மாகாணக் கல்விப் பணிப்பாளர்களின் சிபார்சுடன் அனுப்பப்படல் வேண்டுமென 2005.04.29இல் கல்வி அமைச்சில் நடந்தேறிய நவோதயத் திட்ட அதிகாரிகள், மாகாண நவோ்தய இணைப்பு அதிகாரிகள் அடங்கிய ஒன்றுகூடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை எனது கவனத்திற்கு அவர் கொண்டு வந்தார்.

வன்னித் தேர்தல் தொகுதியின் மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் நவோதயப் பாடசாலைகள் திட்டம் முற்றுமுழுதாக நடைமுறைப் படுத்தப்படாமலிருப்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர்களின் ஆலோசனையுடன் மாணவர் தொகை, பின்தங்கிய பிரதேசம் ஆகியன கவனத்தில் எடுக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்டுள்ள கீழ்க்காணும் பாடசாலைகளை நவோதயப் பாடசாலைகளாகத் தரமுயர்த்த வேண்டுமென சிபார்சு செய்கிறேன்.

***மன்னார்***

மன்/தூய யோசப் வாஸ் மகா வித்தி. (மடு வலயம்), மன/பெரிய பண்டிவிரிச்சான் றோ.க.த.க. பாடசாலை (மடுவலயம்), மன்/அரிப்பு றோ.க.த.க.பாடசாலை (மன்னார்),மன்/முருங்கன் மகா வித்தி.(மன்னார்), மன்/உயிலங்குளம் றோ.க.த.க.பாடசாலை (மன்னார்).

***முல்லைத்தீவு***

மு/சிவநகர் தமிழ் வித்தி.(முல்லைத்தீவு வலயம்), மு/முள்ளியவளை றோ.க.பாடசாலை (முல்லைத்தவு வலயம்),மு/பாலிநகர் மகா வித்தி.(துணுக்காய்),மு/முத்தையன்கட்டு வலதுகரை அ.த.க. பாடசாலை (துணுக்காய்),மு/மல்லாவி மகா வித்தி. (துணுக்காய்) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# அரச கரும மொழியாகத் தமிழ் சட்டத்தில் இருந்தும் அமுல்படுத்தப்படாமையே பிரச்சினைக்குக் காரணம்

## அரசியல் யாப்பு விவகார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மொழியை அரச கரும மொழியாக ஏற்றுக்கொண்டுள்ள போதிலும் இன்றுவரை அதனை பிரயோக ரீதியாக செயற்படுத்தாததன காரணமாக பிரச்சினைகள் பல தோன்றியுள்ளதாக அரசியல் யாப்பு விவகார அமைச்சர் டியூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

எனவே மொழிகள் தொடர்பான ஆய்வுகளை நடத்துவதற்கு நிறுவனம ஒன்றை ஸ்தாபிப்பது அவசியம் எனவும் அமைச்சர் சுட்டிககாடடியுள்ளார்.

இது தொடர்பாக அரசாங்கத்திற்கு சிபார்சுகளை முன்வைக்க ஆலோசித்து வருவதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 5வருடங்களாக மொழிபெயர்ப்பாளர்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இந்த நிலையில் அரசாங்க சேவையில் புதியவர்களை சேர்த்துக் கொள்வதற்கு தற்போது உள்ள நடைமுறையில் மாற்றங்கள் கொண்டு வருவதற்கான யோசனைகளை முன்வைப்பதற்கு அரசியல் யாப்பு விவகார அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

அரசியல் யாப்பில் ஏற்றுக்கொளளக்கூடிய பரிந்துரைகள், திருத்தப்படாத நடைமுறைகள் குறித்து நியமிக்கப்பட்ட குழுவே இவ் சிபார்சுகள் குறித்து அவதானம் செலுத்தும்.

குறிப்பிடப்பட்ட விடயம் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட பின்னர் இந்த சிபார்சுகள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும்.

(அ-9)

# ஆட்சி அதிகாரத்தை தீர்மானிக்கும் அதிகாரம் மக்களிடமே உள்ளது

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஆடசி அதிகாரத்தை தீர்மானிக்கும் பொறுப்பு மக்களிடமே உள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களின் உரிமைகளை ஜனாதிபதியும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கமும் பறிப்பதற்கு முயற்சித்தால் இந்த வருடததில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு மக்களின் சக்தியைப் பெற நேரிடும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியல் யாப்பிற்கு அமைய 6 வருடங்களுக்கு ஒருமுறை ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்யும் உரிமை மக்களுக்கு இருக்கின்றது.

பொலநறுவையில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே எதிர்க்கட்சித் தலைவர் இந்த விடயங்களை தெரிவித்துள்ளார்.

(அ-9)

# மரணத்தின் நிழலில்

## மீள் பார்வை சதாம் கதை 27

பி.ஜே.ராஜய்யா

## ஈரான் போரில் அமெரிக்க பயங்கரவாதம்!

ஈரான்-ஈராக் போர் நடந்து கொண்டிருக்கையில் அமெரிக்க மந்திரி ரிச்சர் மர்ஃபி திடுதிப்பென பாக்தாத் வந்து அதிபர் சதாம் உசேனை சந்தித்துப் பேசினார். ஐ.நா.சபையின் வேண்டுகோளை ஏற்று போரை நிறுத்துமாறு கேட்டுக் கொள்வதற்காகத்தான் மர்ஃபி சதாமை சந்தித்ததாக அப்போது வெளியில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இந்த சந்திப்பிற்குப் பிறகு ஈராக்கின் இராணுவத் தாக்குதல் தீவிரமடைந்தது. வளைகுடாவில் போர்க்கப்பல்களின் மோதலாய் யுத்தம் விரிவடைந்தது.

பிரான்ஸிடமிருந்து வாங்கிய ஏவுகணைகளைக் கொண்டு ஈரானின் எண்ணெய்க் கப்பல்களைத் தாக்கியளித்தது ஈராக் கடற்படை.

பதிலுக்கு ஈரான் கடற்படை, போரில் ஈராக்கை ஆதரிக்கும் குவைத், சவுதிஅரேபியா ஆகியவற்றின் எண்ணெய்க் கப்பல்களைத் தாக்கி நாசம் செய்தது.

இதுதான் சாக்கென்று அமெரிக்க தனது நட்பு நாடுகளான குவைத், சவுதி இவற்றின் எண்ணெய்க் கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டிய கடமை தனக்கு இருப்பதாகக் கூறிக்கொண்டு விமானம் தாங்கி போர்க்கப்பலை களம் இறக்கியது. அமெரிக்க போர்க்கப்பலின் பாதுகாப்புடன் சென்று கொண்டிருந்த குவைத் எண்ணெய்க் கப்பல் ஒன்று கடலுக்குள் ஈரான் விதைத்திருந்த கண்ணி வெடியில் சிக்கி வெடித்துச் சிதறியது.



இராணுவ முகாமில் சதாம்



அமெரிக்க மந்திரி ரிச்சர்ட் மர்ஃபியுடன்

ஆத்திரமடைந்த அமெரிக்கா உடனடியாக தனது கூட்டு நாடுகளுக்கு அழைப்பு விடுத்தது. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் நாடுகளைச் சேர்ந்த 60றக்கும் மேற்பட்ட போர்க் கப்பல்கள் விரைந்து வந்து ஈரானின் கடல் எல்லையை முற்றுகையிட்டன. ஈரான் கடற்படை ஜகா வாங்கியது.

சில மாதங்களுக்குப் பின் கடலோரம் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க ஹெலிகாப்டர் ஒன்று சுட்டு விழுத்தப்பட்டது. ஈரான் தான் இந்த நாசவேலைக்குக் காரணம் என்று குற்றம் சாட்டிய அமெரிக்கா, பதிலடியாக 3 ஈரானிய ரோந்துக் கப்பல்களை தாக்கி கடலுக்குள் மூழ்கடித்தது.

பின்னொரு நாள் குவைத்தின் கடல் எல்லைக்குள் நிறுத்தப்பட்டிருந்த அமெரிக்க கப்பல் மீது ஈரான் நாட்டு ஏவுகணை வந்துவிழுந்தது. அவ்வளவுதான்... கடலோரம் இருந்த இரண்டு ஈரானிய எண்ணெய்த் தளங்களை அமெரிக்கப் பேர்க்கப்பல்கள் ஆவேசமாகத் தாக்கி சேதப்படுத்தின தவிர அமெரிக்க இராணுவ தொழில்நுட்ப நிபுணர்கள் ஈராக் படையினருடன் இரகசியமாய் இணைந்து செய்ற்பட்டார்கள். விளைவு...?

ஈரானின் தலைநகரான டெஹ்ரான் மீது ஈராக் ஏவுகணைகளை சரமாரியாக வீசித் தாக்கியது.

ஈரானியர்கள் பீதியில் நிலைகுலைந்தார்கள். எனினும் கொமேனி அசரவில்லை. அவர் போா நிறுத்தம் செய்வதாக இல்லை என்பது உறுதியானவுடன் அமெரிக்கா தனக்கே உரித்தான பயங்கரவாத முறையை கையில் எடுத்தது.

இரண்டாம் உலகப்போரின் இறுதிக்கட்டத்தில் அடங்க மறுத்த ஜப்பானை அடக்க அனுகுண்டு வீசி இலட்சக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்று குவித்தே- அந்த அளவுக்கு இல்லை என்றாலும் -அதுபோன்ற கொடூரச் செயலில் இப்போதும் அமெரிக்கா இறங்கியது.

1988யூலை 3ஆம் திகதி ஈரானின் பயணிகள் விமானம் ஒன்று துபாய் செல்வதற்காக பந்தர் அப்பாஸ் விமான நிலையத்தின் ஓடு தளத்தில் இருந்து அப்போது தான் வானுக்குப் புறப்பட்டிருந்தது. அடுத்த நிமிடம் வின்னெஸ் எனும் அமெரிக்கப் பேர்க்கப்பலில் இருந்து சீறிக்கிளம்பிய அதி பயங்கர ஏவுகணை குறி தவறாமல் அந்தப் பயணிகள் விமானத்தை தாக்கி வீழ்த்தியது. இதில் விமானத்தில் இருந்த 290 அப்பாவிப் பயணிகளும் பரிதாபமாக உயிரிழந்தார்கள்.

ஈரான் அரசு அலறியது. ஈரான் இராணுவத்தை போர் முனையில் தோற்கடிக்க முடியாத சதாம் தன் இரகசியக் கூட்டாளியான அமெரிக்காவை ஏவிவிட்டு அப்பாவி ஈரானியர்களை கொன்று குவிப்பதாக அது குற்றம் சாட்டியது.

அமெரிக்கா அலட்டிக்கொள்ளவே இல்லை.

"அது பயணிகள் விமானம் என்பது எங்களுக்குத் தெரியாது. போர் விமானம் என நினைத்துப் போட்டுத் தள்ளிவிட்டோம்" என்கிற ரீதியில் மேம்போக்காக விளக்கமளித்தது அமெரிக்கா.

"அது தான் உண்மை என்றால் நடந்த சம்பவத்திற்கு மன்னிப்புக் கேட்கவேண்டும். அத்துடன் நஷ்டஈடு தரவேண்டும்" என்று ஈரான் வற்புறுத்தியது.

வேண்டுமானால் தலைக்கு இவ்வளவு என்று கணக்குப்போட்டு இறந்தவர்களின் குடும்பங்களுக்கு பணம் கொடுத்து விடுகிறோம். ஆனால் மன்னிப்புக் கேட்கமுடியாது என்றது அமெரிக்கா.

"மன்னிப்புக்கேள்"என்று ஈரான் பிடிவாதம் பிடிக்க... "முடியாது. உன்னால் முடிந்ததைப்பார்" என்று அமெரிக்க முறுக்க இப்போது தான் அமெரிக்காவின் உள்நோக்கம் ஈரான் தலைவர்களுக்குப் புரிந்தது...

வம்பு இழுத்துப் பெரிய அளவில் நேரடி யுத்தத்தில் குதிப்பதற்காகவே அமெரிக்கா திட்டமிட்டு பயணிகள் விமானத்தை வேண்டுமென்றே சுட்டு வீழ்த்தியிருக்கிறது.

நெருங்கிக் கொண்டிருக்கும் பேராபத்தை முன்னுணர்ந்து கொண்ட ஈரான் தலைவர்களில் முக்கியமானவர் அலி அக்பர் ஹஸ்மி ரஃப்ஸஞ்ஞானி. கொமேனியின் அரசியல் வாரிசு என்ற அந்தஸ்தில் இருந்த அவர் தான் தனது குருநாதரிடம் நிலைமையை எடுத்துச் சொன்னார்.

"போர் காரணமாக பொருளாதார ரீதியிலும் இராணுவ ரீதியிலும் திணறிக்கொண்டிருக்கும் நாம் அமெரிக்கா விரித்த வலையில் விழுந்து அந்நாட்டுடனும் சண்டையில் இறங்கினால் நமது ஆட்சியையும் இழக்க நேரிடும்" என்று அவர் எச்சரித்தார். சதாம் ஆட்சியை தூக்கி எறியாமல் போரை நிறுத்த மாட்டேன் என்று வீம்பு செலுத்திக்கொண்டிருந்த கொமேனி இதற்குப் பிறகு தான் போர் நிறுத்தத்திற்கு சம்மதிப்பதாய் அறிவித்தார். ஓயவே ஓயாது என்று கருதப்பட்ட 8 ஆண்டுப்போர் 1988 யூலை 18ஆம் திகதி ஓய்ந்தது.

இப்போரில் பல்லாயிரம் கோடி ரூபா பாழானது. இருதரப்பிலும் இலட்சக்கணக்கான மனித உயிர்கள் பலியாயின. இந்நிலையில் சதாம் அதிபராகி 9 ஆண்டுகள் உருண்டோடி இருந்தன. இந்த ஆட்சிக் காலத்தில் அவர் ஈராக் மக்களுக்கு இன்பத்தையும் துன்பத்தையும் சம அளவில் அளித்திருந்தார்.

(தொடரும்)

## மேல் கொத்மலைத் திட்டம் அடுத்த மாதம் ஆரம்பம்

(கொழும்பு)

மேல் கொத்மலை மின் உற்பத்தித் திட்டம் அடுத்தமாதம் ஆரம்பிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மின்சார எரிபொருள் அமைச்சின் செயலாளர் பீ.வீரகத்தி இதுகுறித்துத் தெரிவிக்கையில்,

15 வருடங்களாக இடம்பெற்ற சர்ச்சைக்குப் பின்னர் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படுவது அமைச்சுக்கு கிடைத்த வெற்றியாகும்.

இந்தத் திட்டத்திற்கு 280 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி செலவிடப்படும். இதற்கு ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு வங்கி உதவி வழங்கும்.

அதேசமயம் நுரைச்சோலை மின் உற்பத்தித் திட்ட வேலைகளை இந்த ஆண்டில் ஆரம்பிகக அரசாங்கம் உத்தேசித்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

(அ-7)

## தேசிய வாசிப்பு மாதத்தில் விசேட செயற்திட்டம்

(சாவகச்சேரி)

தேசிய நூலக ஆவணவாக்கல் சபையால் ஒக்டோபர் மாதம் "தேசிய வாசிப்பு மாதமாக" பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் ஒக்டோபரில் வாசிப்பு, மற்றும் நூலக அபிவிருத்தியின் பொருட்டு விசேட செயற்திட்டங்கள் உள்ளூராட்சி மன்ற பொது நூலகங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன. இத்தகைய செயற்திட்டங்கள் மாவட்ட, மாகாண மட்டத்தில் மதிப்பாய்வு செய்யப்பட்டு வருட இறுதியில் நடைபெறும் விழாவில் அவ் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் அலுவலர்களுக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ற-21)

## சிறைச்சாலைகளில் திடீர் சோதனை

(கொழும்பு)

கொழும்பு சிறைச்சாலையில் நேற்று முன்தினம் முற்பகல் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது சிறைக் கைதிகளிடமிருந்து பணமும் பெரும் தொகையான போதைப்பொருளும் சிறைச்சாலை அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 6 கைதிகளை விசாரணை செய்து வருவதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் ரூமி மருசூட் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தின் கீழ் இவர்களுககு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து அதிகபட்ச தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் திடீர் சோதனைகளை நடத்தும் நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு அதிகாரிகளைக் கொண்ட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

(அ-9)









இலண்டன் காரை அபிவிருத்திச் சபையினால் காரை நலன்புரிச் சங்கத்திற்கு தண்ணீர் பௌசர் வாகனம் அண்மையில் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அப் பௌசரையும், காரைநகர் பிரதேச செயலர் க.சிறிமோகனிடம் தண்ணீர் பௌசர் ஆவணத்தை கையளித்து அதனை பிரதேச செயலர் காரை நலன்புரிச் சங்கத்திடம் கையளிப்பதையும், இலண்டன் காரை அபிவிருத்திச் சபை நிர்வாக உறுப்பினரை சமாதான நீதவான் மகாராணி சோமசேகரம் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:கரைநகர் செய்தியாளர்)

அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன் - குறள்

வலம்புரி

# ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி.தனித்துபோட்டியிடலாம்!

எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் பேரினவாதக் கட்சிகள் கண்ணும் கருத்துமாகவுள்ளன. சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கியதேசியக்கட்சி என்ற இருபிரதான கட்சிகளும் தேர்தல் களத்தில் இறங்குவது ஏற்கனவே தெரிந்தவிடயமாயினும், ஜே.வி.பியின் நிலைப்பாடு என்ன? என்பது இதுவரை இரகசியமாகவே உள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதிவேட்பாளர் ரணில்விக்கிரமசிங்காவிற்கு ஜே.வி.பி.ஆதரவு வழங்காது என்பது உறுதியான முடிபு.

அதேநேரம் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதிவேட்பாளரும் தற்போதைய பிரதமருமான மகிந்த ராஜபக்ஷவோ ஜே.வி.பியின் ஆதரவு தனக்கு கிடைக்குமென நம்பியுள்ளார்.

இந்த நம்பிக்கை காரணமாகவே அவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும் எதிர்க்கத் தயாராக இருக்கின்றார். ஜனாதிபதியை எந்தளவிற்கு எதிர்க்கின்றோமோ, அந்தளவிற்கு ஜே.வி.பியின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளலாம் என்பது மகிந்தவின் எதிர்பார்ப்பு.

இது ஒருபுறம், மறு புறத்தில் அடுத்துவரும் ஜனாதிபதித்தேர்தலை இல்லாமல் செய்யவேண்டுமென்பதே சந்திரிகா கும்ாரதுங்காவின் இலக்கு. தனது இலக்கை நிறைவேற்றுவதற்கு உடனடி வழிமுறைகள் ஏதேனும் இல்லை என்பதால் , தனது பதவிக்காலத்தை 2006வரை நீடித்தால், அதற்குள் ஏதாவது வழிமுறைகள்-உபாயங்களை பயன்படுத்தி ஜனாதிபதிப் பதவியை இல்லாதொழித்துவிடலாம் என்பது அவரின் நினைப்பு.

பிரதமரதும்,ஜனாதிபதியினதும் நினைப்புகள் உள்ளார்ந்தமானவையாயினும், அதை மையமாகக் கொண்டே அவர்களின் செயற்பாடுகள் உள்ளன. ஜனாதிபதித்தேர்தலை 2005 ஆண்டிற்குள் நடத்த வேண்டுமென்பதில் மகிந்தராஜபக்ஷ மிக உறுதியாக உள்ளார்.

விரைவாக தேர்தலை நடத்துவதன் மூலமாக இரண்டு விடயங்களில் வெற்றிகாணமுடியும் என்பது அவரின் நிலைப்பாடு. அதாவது, விரைவாக தேர்தலை நடத்துவதன் ஊடாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் நினைப்பை வெல்லமுடியும் என்பது ஒன்று. மற்றையது தேர்தலுக்கான கால அவகாசம் கிடைக்குமானால், ஜே.வி.பி.தனது சார்பான வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித்தேர்தலில் நிறுத்தலாம்.

அவ்வாறு ஜனாதிபதித்தேர்தலில் ஜே.வி.பி. தனித்துப்போட்டியிடுமாயின் தான் ஜனாதிபதியாகும் வாய்ப்பு குறைந்துவிடும். எனவே இதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு ஜனாதிபதித்தேர்தலை உடனடியாக நடத்துவதே ஒரேவழி.

இந்த முடிபுகளோடு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது திட்டத்தை அமுல்படுத்த முயற்சிக்கின்றார். ஆனால் ஜே.வி.பியோ தனது பலத்தை நிரூப்பிப்பதற்கு பொதுத்தேர்தலை விட ஜனாதிபதித்தேர்தலே நல்ல களம் எனக்கருதுகிறது.

ஆக, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி தனித்துப் போட்டியிடும் வாய்ப்பு அதிகமாகவே உள்ளது.

# சமாதான நடவடிக்கைகள் தற்காலிகமாக தடைப்படும்?

(கொழும்பு)

இலங்கையிலும் நோர்வேயிலும் தற்போது ஏற்பட்டு வரும் அரசியல் மாற்றங்களினால் சமாதான முயற்சிகளில் மத்தியஸ்தராகப் பணியாற்றி வரும் நோர்வேயூடாக மேற்கொள்ளப்பட்டு வரும் பேச்சுவார்த்தைகள் சில மாத காலத்தற்கு தடைப்படக் கூடிய அறிகுறிகள் தோன்றியிருப்பதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலஙகையில் தற்போது நிலவும் ஜனாதிபதித் தேர்தல் சூழல் மற்றும் செபரெம்பர் மாதம் 12ஆம் திகதி நடைபெறவுள்ள நோாவே பொதுத்தேர்தல் என்பன இந்த நிலைக்கான காரணமாக இருப்பதாகவும் அந்த அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் இவ்வாண்டில நடைபெற்றாலும் அடுத்த ஆண்டில் நடைபெற்றாலும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலம் இவ்வாண்டுடன நிறைவடையும். அதனால் முக்கிய அரசியல் விடயங்கள் சம்பந்தமாக உடன்பாடு காணப்படுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை என்றும் புதிய நிர்வாகத்துடனேயே பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

அடுத்த மாதம் 12ஆம் திகதி நடைபெறவுள்ள நோர்வே பொதுத் தேர்தலில் அந்நாட்டு நிர்வாகத்தில் மாற்றங்கள ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படாவிட்டாலும் தோதலுக்கு முகம் கொடுத்தல் மற்றும் அதன் பின்னர் அரசியல ரீதியான செயற்பாடுகள் போன்றவற்றுக்காக அந்நாட்டுக்கு கால அவகாசம் தேவைப்படுவதால் இலங்கையின் சமாதான முயற்சிகளில் காலத்தை செலவழிக்க அவர்களுக்கு முடியாமல் இருக்கும் என அரசியல் அவதானிகள மேலும் சுட்டிக்காட்டுகின்றனர். (ற)

# இலங்கைக்கு இராணுவ உதவிகளை இந்தியா வழங்கக்கூடாது

## உலகத் தமிழர் பேரவை மாநாட்டில் தீர்மானம்

(கொழும்பு)

எக்காரணம் கொண்டும் இலங்கைக்கு இராணுவ ரீதியான உதவியை செய்யக்கூடாது. அவ்வாறு செய்வது தமிழர்களைக் கொன்று குவிக்க உதவுவதாகும் என தமிழ்நாடு நாகர் கோவிலில் நடைபெற்ற உலகத் தமிழர் பேரவையின் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அமைதியான சூழலை சீர்குலைக்க சிங்களப் பேரினவாத சக்திகள் இடைவிடாமல் முயற்சி செய்து வருகின்றன. போரினாலும் ஆழிப்பேரலையினாலும் பெரும் பாதிப்பிற்கு உள்ளான தமிழின மக்களுக்கு உதவி செய்ய உலக நாடுகள் முன்வந்த போதும் அந்த உதவி கிடைக்கவிடாமல் திட்டமிட்டு தடுக்கப்படுகிறது.

இலங்கையில் அமைதியான சூழ்நிலை தொடரவும் பாதிக்கப்பட்ட தமிழர்கள் புனர்வாழ்வு பெறவும் இந்திய அரசு முன்நின்று முயற்சிகளை மேற்கொள்வதுடன் உலக நாடுகளையும் அவ்வாறே செய்ய வைக்க வேண்டும் எனவும் அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# சிறுபான்மைக் கட்சிகளுடன் கூட்டுச்சேர இரு பிரதான கட்சிகளும் கடும் போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மைக் கட்சிகளுடன் கூட்டுச் சேருவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தற்போது கடுமையாகப் போட்டியிட்டு வருவதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரு பிரதான கட்சிகளினதும் வேட்பாளர்கள் சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்களை இந்நாட்களில் சந்தித்து தங்களின் கட்சிகளுக்கு அவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்காக இரகசியப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் கடந்த செவ்வாய்க்கிழமை அரசுத் தலைவரை சந்தித்து தமது கட்சியின் ஆதரவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குப பெற்றுத்தருவது சம்பந்தமாக பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதாகத் தெரியவருகிறது.

அதே தினம் இரவு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த ஆறுமுகம் தொண்டமான், ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்குவதற்கான நிபந்தனைகள் குறித்து ஆராய்ந்துள்ளார்.

சவுதிஅரேபிய மன்னர் பாக்த்தின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்ளச் சென்ற பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இந்தப் பயணத்திற்கு அவருடன் சென்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூபஹக்கீமுடன் அவர்களின் கட்சியின் ஆதரவைப் பெற்றுக் கொள்வது குறித்து விரிவாகக் கலந்துரையாடியிருப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பின்னர் ரவு,பஹக்கீம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் இவ்விடயம் குறித்து நீண்ட்நேரம் ஆராய்ந்துள்ளார். (ற)

# சகல முஸ்லிம் பாடசாலைகளும் 3ஆம் தவணைக்காக இன்று திறப்பு

(கொழும்பு)

நாட்டின் சகல முஸ்லிம் பாடசாலைகளும் இந்த ஆண்டின் 3ஆம தவணைக் கல்வி நடவடிக்கைகளுக்காக இனறு திறக்கப்படும் எனக் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.எவ்.குணவர்த்தன அறிவித்துள்ளார்.

முஸ்லிம் பாடசாலைகளில் 3ஆம் தவணைக் கல்வி நடவடிக்கைகள் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளன.

இன்று திறக்கப்படும் முஸ்லிம் பாடசாலைகள் புனித றம்ழான் நோன்பு விடுமுறைக்காக எதிர்வரும் அக்டோபர் 3ஆம் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் 8ஆம் திகதி வரை மூடப்படும்.

முஸ்லிம் பாடசாலைகள் 3ஆம் தவணையில் 2ஆம் கட்ட நடவடிக்கைகளுக்காக மீண்டும் நவம்பர் மாதம் 9ஆம் திகதி திறக்கப்படவுள்ளன.

இரண்டாம் தவணை விடுமுறைக்காக தற்போது மூடப்பட்டுள்ள தமிழ் ,சிங்கள அரசாங்கப் பாடசாலைகள் 3ஆம தவணைக்காக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5ஆம திகதி திறக்கப்படவிருப்பதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.


நாட்டின் சகல தமிழ், சிங்கள, முஸ்லிம் அரசாங்கப் பாடசாலைகளினதும் இந்த ஆண்டின் கல்வி நடவடிக்கைகள் யாவும் நவம்பர் மாதம் 9ஆம் திகதியுடன முடிவடையவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (ற-9)

# துரிதகதியில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கை

வடமராட்சி கிழக்கில் உள்ள எல்லாக் கிராமங்களிலும் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் கண்ணிவெடி மற்றும் மிதிவெடி, செல்கள் அகற்றும் பணி துரிதகதியில் நடைபெற்று வருகின்றது.

இடைத்தங்கல் முகாமில் வாழும் மக்களிற்கான 3ஆம் கட்ட வீட்டுத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்வந்துளள பொது நிறுவனங்கள் இப் பகுதியில் கண்ணிவெடி இருப்பதாக அச்சம் தெரிவித்ததையடுத்து மனிதநேய கண்ணிவெடி அகற்றும பிரிவு முன்வந்து இப் பணியை ஆரம்பித்துள்ளது. (து-97)

## தினசரி தியானம்



## விவேகச் சிந்தனைகள்

கொடுப்பதற்கு என்னிடம் பணம் இல்லை. கற்பதற்கான அறிவு என்னிடம் இல்லை. யோகம் செய்ய நேரம் இல்லை. இறைவா! எனது உடல், மனம் அனைத்தையும் உன்னிடம் நான் ஒப்படைத்து விட்டேன்.

சுவாமி விவேகானந்தர்

# மேற்கிந்தியத் தீவுகள் அணியை 7 ஓட்டங்களால் இந்தியா வென்றது

(கொழும்பு)

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் இந்திய அணிக்குமிடையில் நேற்று நடைபெற்ற முக்கோணக் கிரிக்கெற் தொடரில் இந்திய அணி 7 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்திய அணி 50 ஓவர்கள் முடிவில் 4 விக்கெற்றுக்களை இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் முஹமட்கைவ், தோணி ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 83, 28 ஓட்டங்களைப் பெற்றனர். யுவராஜ்சிங் 110 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெற்றுக்களை இழந்து 255 ஓட்டங்களைப் பெற்றது. மார்டன், ஸ்மித் ஆகியோர் முறையே 84, 26 ஓட்டங்களைப் பெற்றனர். ராம்டின் ஆட்டமிழக்காமல் 74 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் கும்ளே, பதான், நெக்ரா ஆகியோர் முறையே 3,2,2 விக்கெற்றுக்களை வீழ்த்தினர்.

இதேவேளை நாளை இலங்கை, இந்திய அணிகளுக்கிடையில் இறுதிப்போட்டி நடைபெறவுள்ளது. இந்த இறுதிப் போட்டியை இந்தியத் தொலைக்காட்சியான தூரதர்ஷனில் நேரடி ஒளிபரப்புச் செய்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. (ச)

# இணுவில் சம்பவம் குறித்து கருத்தெதுவும் கூறமுடியாது

## கண்காணிப்புக்குழுப் பேச்சாளர்

(யாழ்ப்பாணம்)

இணுவில் பகுதியில் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டமை மற்றும் அது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளச் சென்ற யாழ். பொலிஸ் அத்தியட்சகர் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக மேற்கொள்ளப்படும் விசாரணைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாக இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

பொலிஸ் விசாரணைகள் தற்போது நடைபெற்றுவருகின்றன. இவ்விசாரணைகள் முடியும்வரை இச்சம்பவம் யுத்தநிறுத்த மீறலா என்பது குறித்து எதுவும் கூறமுடியாதுள்ளது. எனவே விசாரணைகள் முடிவடைந்தவுடன் யுத்தநிறுத்த மீறலா? இல்லையா? என்பது குறித்து கூறமுடியும் என்று கண்காணிப்புக்குழுவின் பதில் பேச்சாளர் விமிலியா குட்டிபேனன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இணுவிலில் இடம்பெற்ற சம்பவத்தினை அடுத்து அதனைக் கட்டுப்படுத் தச் சென்ற குறிப்பிட்ட யாழ். பொலிஸ் அத்தியட்சகர் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். கொல்லப்பட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரதிப் பொலிஸ்மா அதிபராக பதவி உயர்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-8)

# மேர்வினுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைவு

(கொழும்பு)

பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவிற்கு எதிராக கொழும்பில் இன்று நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிஸும் கலந்துகொள்ளவுள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் விடுத்த அழைப்பை அடுத்தே தாம் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

சிறுபான்மைக் கட்சியின் அழைப்பை ஏற்று மற்றுமொரு சிறுபான்மைக் கட்சி ஆதரவு வழங்குவது மிக முக்கியம் என்று அவர் தெரிவித்தார். தமிழ்பேசும் மக்களின் சார்பில் மூன்று சிறுபான்மை மக்களும் இப்போராட்டத்தில் கலந்துகொள்ளவதற்கு முன்வந்துள்ளமை இலங்கை அரசியல் வரலாற்றில் பாரிய திருப்புமுனையாக அமையுமென்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்புக்கோட்டை நீதிமன்ற வளாகத்தில் இந்திய வம்சாவளி மக்களை தூசித்த பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே மலையக மக்கள் முன்னணி ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தது. இதற்கு ஆதரவாக இலங்கைத் தொழிலாளர் காங்கிர ஸ், மேல்மாகாண ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, அகில இலங்கை ஜனநாயக தொழிலாள்ர் காங்கிரஸ் போன்ற கட்சிகள் உட்பட பல அமைப்புக்களும் இன்றைய போராட்டத்தில் பங்குபற்றவுள்ளதாகத் தெரிவித்துள்ளன.

கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக நடைபெறவுள்ள இந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர் பேரணி ஒன்றும் நடாத்தப்படவுள்ளது. (ச)

# சாந்தரூபனின் பூதவுடல் தாவடியில் நல்லடக்கம்

இணுவில் பகுதியில் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சிகை அலங்கரிப்பாளர் ஜெயசீலன் சாந்தரூபனின் இறுதி நிகழ்வுகள் நேற்று கோண்டாவிலில் உள்ள அவரது உறவினர் வீட்டில் இடம்பெற்றது.

இந்த இறுதி நிகழ்வில் யாழ்ப்பாணம், வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, தீவகம் பகுதிகளைச் சேர்ந்த சிகையலங்கரிப்பு சங்க உறுப்பினர்கள், தேசிய எழுச்சிப் பேரவையினர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

அங்கு அஞ்சலிக் கூட்டம் இடம்பெற்றதை அடுத்து பிற்பகல் 3 மணியளவில் தாவடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. (ச-8)

---

### ஜனாதிபதித்....

தற்போதைய நாட்டின் சட்ட ஒழுங்குகள் குறித்து மக்கள் திருப்தியற்ற நிலையில் உள்ளனர்.

இந்நிலையில் பாரிய மாற்றத்தை விரும்பும் பட்சத்தில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு வாக்களித்து நிவாரணத்தைப் பெறலாம். இதனையே நாம் மக்களின் கவனத்திற்கு கொண்டுவரவுள்ளோம் என ஐ.தே .கவின்பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். (ச-8)

---

### ஜே.வி.பியின்...

இதனையடுத்து மோட்டார்சைக்கிளில் சென்றவர்கள் திருப்பதித்தாக்கியதில் பொலிஸ் சார்ஜன்ட் காயமடைந்தார். இச்சம்பவங்களை அடுத்து குறிப்பிட்ட பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது பற்றை ஒன்றில் இருந்து காயமடைந்த நிலையில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவ் இளைஞனிடம் இருந்து கைத்துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப இளைஞர் வவுனியாவைச் சேர்ந்த நாகேந்திரன் ராஜகுமார் (வயது 28) என ஆரம்ப விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவ் இளைஞன் கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக தம்புள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண பொலிஸ்மா அதிபர் றொகான் அபயவர்த்தன தெரிவித்தார். (ச-8)

# ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்ற ஜனாதிபதிக்கு அழைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் இரண்டாவது தடவையாகவும் உரையாற்றுவதற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

பொதுச் சபையின் 60 ஆவது கூட்டத்தொடர் அடுத்த மாதம் 14 ஆம் திகதியிலிருந்து 16 ஆம் திகதிவரை நியூயோர்க்கில் நடைபெறவுள்ளது. பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்றிய பின்னர், சர்வதேச ஊடகவியலாளர் மாநாடு ஒன்றிலும் கலந்துகொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி நியூயோர்க்கில் தங்கியிருக்கும் காலத்தில் பல உலகத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதுடன், நியூயோர்க்கின் ஆசிய சங்கத்திலும் உரையாற்றவுள்ளார்.

இந்த வருட பொதுச்சபைக் கூட்டத் தொடரில் பெருந்தொகையான உலகத் தலைவர்கள் உரையாற்றவுள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகம் கொபி அனான் தெரிவித்திருக்கிறார். (ற-7)

# அரசாங்கப் பிரதிநிதிகளுடன் ஹெல்கீசன் முக்கிய பேச்சு

வெளியுறவுத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜெயந்த தனபால ஆகியோர் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசனைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

நான்கு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு கடந்த வியாழக்கிழமை கொழும்பு வந்த ஹெல்கீசன் நேற்று முன்தினம் இச்சந்திப்பில் ஈடுபட்டார்.

கொழும்பு வந்த அன்று மாலையே ஜனாபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்த இவர், கடந்த வெள்ளிக்கிழமை காலை விடுதலைப் புலிகளைச் சந்தித்த பின்னர் மீண்டும் ஜனாதிபதியைச் சந்திக்கவிருந்தார்.

எனினும் ஜனாதிபதி சுகவீனம் அடைந்ததையடுத்து இச்சந்திப்பு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடன் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது சமாதானப் பேச்சுக்களை தொடர்ந்தும் முன்னெடுப்பது தொடர்பாகவும், தற்போதுள்ள நெருக்கடி நிலைமைகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

இதன்போது கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடிய விடயங்கள் தொடர்பாக லக்ஷ்மன் கதிர்காமருக்கும், ஜெயந்த தனபாலவிற்கும் விடார் ஹெல்கீசன் எடுத்துக் கூறியுள்ளார்.

அத்துடன் போர்நிறுத்த உடன்படிக்கையின் நடைமுறைகள் பற்றியும் இங்கு ஆராயப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

மேலும் யாழ்ப்பாணம், இணுவில் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் மற்றும் பொதுக்கட்டமைப்பு, அதனை நடைமுறைப்படுத்துவதற்குச் சாத்தியமான வழிவகைகள் தொடர்பாகவும் இவர்கள் கலந்தாலோசித்துள்ளனர்.

அத்துடன் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகளின் பாதுகாப்பான பயண ஏற்பாடுகள் குறித்தும் இங்கு கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெற்றுள்ளன.

இதேவேளை, ஹெல்கீசன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரையும் சந்தித்து வடக்குக் கிழக்கு நிலைமைகள் குறித்து விரிவாக ஆராய்ந்ததுடன், போர்நிறுத்த உடன்பாடு எதிர்கொள்ளும் நெருக்கடிகள் குறித்தும் விரிவாக ஆராய்ந்துள்ளனர். (ச 4)

# காட்டுக்குச் சென்ற மூவர் மீது துப்பாக்கிச் சூடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட எல்லைபுற காட்டுப்பகுதிக்கு விறகு எடுக்கச் சென்றவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. மூவர் காட்டுப்பகுதிக்குச் சென்றதாகவும் எனினும் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தினையடுத்து தாம் இருவரும் தப்பிவந்ததாகவும் பொலிஸில் முறையிட்டுள்ளனர். (ச)

# பொலிஸாரின் துப்பாக்கிகள் அபகரிப்பு

(கொழும்பு)

ஜாஎல பிரதேசத்தில் இரவு ரோந்து சேவையில் ஈடுபட்டிருந்த இரண்டு பொலிஸாரின் துப்பாக்கிகள் இனந்தெரியாத நபர்களினால் அபகரிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் கான்ஸ்டபிள் முகத்தில் மிளகாய்த் தூளை வீசிய பின்னர் அவர்களைக் கத்தியால் குத்திவிட்டு இரண்டு துப்பாக்கிகளும் அபகரிக்கப்பட்டுள்ளதாக களனி பிராந்தியத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி குணசேகர தெரிவித்துள்ளார்.

ஓட்டோ ஒன்றில் வந்த 5 பேரே அந்தத் துப்பாக்கிகளை பறித்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்களைக் கண்டுபிடிப்பதற்கு விசேட பொலிஸ் குழுக்கள் ஈடுபட்டுள்ளன. (ற-9)

---

### காயமடைந்த...

ஒன்று வீசப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. ஏறாவூர் பொலிஸார் இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ற)

---

### நெருக்கடி நிலைமை...

இதனால் மக்கள் மத்தியில் யுத்த சூழல் உருவாகுமென்ற அச்சம் எழுந்துள்ளது என அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் போர்நிறுத்த ஒப்பந்தம் தொடர்ந்தும் செயற்படுத்த கண்காணிப்புக் குழு நடவடிக்கை எடுப்பதுடன், அதனைப் பாதுகாத்தும் வைத்திருக்குமென ஹொக்லண்ட் தெரிவித்தார்.

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் 2003 ஆம் ஆண்டிலிருந்து தடைப்பட்டுப்போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
மக்கள்திலகம் எம்.ஜீ.ஆர், லதா, நாகேஷ் நடித்த
உரிமைக்குரல்
கா.நே.11.00,2.45,6.00 (பு.நே)

மனோகரா | யாழ்.
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின அதிரடிவெளியீடாக
மாதவன், சதா, கோவை சரளா நடித்த


நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
அர்ஜுன், சினேகா, கிரண், வடிவேலு சேர்ந்து கலக்கும்
கா.நே 10.30, 02.30 06.30 09.30


இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.